சிந்தனை முழக்கம்

ஆங்கில மூலம் :

"ON THE SAND DUNES"

By K. S. Venkatramani, M. A., B. L.

தமிழாக்கம் :

T. R. சர்மா

கமலாம்பாள் பதிப்பகம்
123, செல்லப்ப செட்டியார் தெரு,
காரைக்குடி (Rd. Dt)

FIRST EDITION — MARCH 1963

PRICE Rs. 1—50

PRINTED AT THE SOUTH INDIA PRESS, KARAIKUDI.

முன்னுரை

V. R. M. செட்டியார். B. A

காவேரி ஆற்றங்கரையிலே, ஆசிரியர் K. S. வேங்கடரமணி அவர்கள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருக்கிறார்கள்.

உலகம் ஏன் இப்படிச் சீரழிந்த நிலையில் இருக்க வேண்டும்; மனிதனை மனிதன் ஏன் அடிமைப்படுத்தவும், கொள்ளையடிக்கவும் வேண்டும்? ஜாதி, மதம், வியாபாரம் நாகரிகம் என்ற அகாரணமான பேர்களைச் சொல்லிக் கொண்டு, மனச்சாட்சியை அறவே ஒழித்துவிட்டு, தூய சிந்தனைகளை அகற்றி, மனதை அளவுக்கு மிஞ்சிக் களங்கப் படுத்திக்கொண்டு ஏன் வாழவேண்டும்? எல்லோரும் ஓர் இனம், ஓர் குலம் என்று ஏன் சம உரிமைகளோடு வாழக் கூடாது. அரசியல் துறையிலே, நல்ல நீதி கிடைப்பதும் அரிதாகிவிட்டதே. ஒற்றுமையை விரும்பாமல், ஏன் வேற்றுமையை உண்டு பண்ணவேண்டும்? சட்டத்தின் விபரீதப்போக்கும், ஜனங்களை அமைதியாக வாழவிட வில்லையே?

இறைவன், மனிதனைச் சிருஷ்டியின் சிகரமாகவே அமைத்திருக்கிறார். தூய குழந்தை உள்ளத்துடன், மனிதன் மாசடையாது வாழ்ந்தால், மனிதகுலம் விரைவில் ஆனந்தமாக முன்னேறிவிடுமே? இதையெல்லாம், ஏன் மனிதன் உணராமல், சுயநலவேட்டையிலே இறங்கி விட்டானே! ஐயோ! பரிதாபம்!

உலகில் சஞ்சலம் குடிகொண்டிருக்கிறது. பஞ்சம் தாண்டவமாடுகிறது. வறுமைப்புயல் எங்கும் சுழன்றடிக் கிறது. இதையெல்லாம் தடுத்து, மனிதன் பூர்ண சுதந்திரத்துடன் வாழ, நாம் பெருமுயற்சி செய்ய வேண்டாமா?

மேலே கண்ட பிரச்னைகளுக்கே, ஆசிரியர் தகுந்த முறையில் வழி கோலுகின்றார்.

ஆசிரியரின் நடையிலே, கவிதை மணம் கமழ்கிறது : இந்த நூலிலே பெரும்பகுதி, வசன கவிதையாகவே அமைந்திருக்கிறது; ஆழ்ந்த தத்துவங்கள் மின்ன விடுகின்றன; சிற்சில நயமான இடங்களில், வாக்கியங்கள் குறளைப்போல உண்மைகளைச் சூத்ரவடிவில் அமைந்திருக்கின்றன. ஆழ்ந்த வசனக் கட்டிடத்திலே, பேருண்மைகளையெல்லாம் ஆசிரியர் அருமையாகப் பொறித்து வைத்திருக்கின்றார். அவருடைய ஆழ்ந்த புலமையும், ஆங்கில வசனத்தைச் சிருஷ்டி ஆக்கத்துடன் கையாளும் முறையும், இந்த நூலுக்கு எதிர்பாராத ஒரு பெருஞ் சிறப்பை நல்குகின்றன. மூலநூல் ஆங்கிலம்: "ON THE SAND-DUNES." இதை மொழிபெயர்ப்பு ஆசிரியர் திரு. T. R. சர்மா அவர்கள் மிக அருமையாகத் தமிழாக்கித் தந்திருக்கிறார்கள். ஆங்கில மூலத்தின் முழு நுட்பத்தையும், அதிஜாக்கிரதையுடன் தன்னுடைய மொழிபெயர்ப்பில் பிரதிபலிக்கச் செய்திருக்கிறார். இது ஒரு மனக்கண்ணாடி. மிக எளிய தமிழ்ச் சொற்கள், பேருண்மைகளை யெல்லாம் திரட்டி ஸ்படிகம் போல தெளிவாகக் களங்கமின்றி எடுத்து உரைக்கின்றன. ஆங்கில மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது என்பதே தெரியாதபடி, ஆனந்தமாக மன அமைதியோடு மொழி பெயர்த்துக்கொண்டே செல்கிறார்; மூல ஆசிரியரின் கருத்தை மிக ஆழமாக உணர்ந்து உணர்ந்து, அநுபவித்து அனுபவித்து, அமைதியாக நல்ல தமிழில் தந்திருக்கிறார். இது காரணமாக, தமிழ் வாசகர்களின் நன்றி அவருக்கு உரியது.

சில பகுதிகளைப் படித்துப் பாருங்கள் :

"ஹே! பாழ்பட்ட நாசம்நிறைந்த நகர வாழ்வே! இறைவன், வாழ்க்கையாகிய நந்தவனத்தில், மனிதனை

அழகிய ஒரு ரோஜாச் செடியாகவே நட்டுப் பயிரிட்டிருக்கிருர். ஆனால் அது துளிர்த்துவரும் அடுத்த கணத்திலேயே, அதை சமுதாயம் மற்றென்ருக மாற்றி விட்டது.''

* * *

“நீ வெளித்தோற்றத்தில் சீலம் நிறைந்தவனுகவும், சிறப்புடையவனுகவும் காணப்படலாம். அதெல்லாம் வெறும் வெளி மயக்கு. கடவுள் அருளிய மேன்மையுமல்ல; உன் ஆன்மீக பிரகாசமும் அல்ல. வெளித் தோற்றத்தில் மிகப் பகட்டாக நான் காண்பது, எனக்கு உன் உள் ஒளி மறைவதையும், ஆன்மாவின் அழிவையும் காட்டுகிறது.''

* * *

இந்த நூலில் இயற்கை வருணனைகள் பல, அருமையாக அமைந்திருக்கின்றன. கடலும், ஆறும், மணலும், நட்சத்திரமும், சந்திரனும், சூரியனும், வயலும், மரங்களும், மலர்களும் செடி கொடிகளும், பக்ஷிகளும், இயற்கையின் சிறந்த எழிலோவிய வனப்பை அபரிமிதமாக எடுத்துக் காட்டுகின்றன; இயற்கையின் சாந்தி நிலையத்திலே, மனிதன் இயற்கையாக வாழ்ந்தால், உலகம் சீரழியக்காரணமே இல்லையே? சீரழிந்த செயற்கை வாழ்க்கை வாழ்வதனுலேதான், உலகம் கலகத்தின் இறுதி எல்லையில் குமுறிக்கொண்டும், தத்தளித்துக் கொண்டுமிருக்கிறது.

தூய ஆனந்தமான உலகை, வெறிபிடித்த துன்ப உலகமாக மாற்றி விடுவதும் முறையா? “இறைவனின் நன்கொடை, கண்ணீர்; மனிதனுக்கு மனிதன் கொடுப்பதும் கண்ணீர்தான்,” என்று பொருள்பட, ஏன் உலகம் திண்டாடவேண்டும். மனிதனை மனிதன் மதிக்காமல் வாழ்ந்தால், உலகம் உருப்படுமா? பொருளாதார நெருக்கடியை வைத்துக்கொண்டால், மனேசாந்தி எங்கிருந்து வரும்? பணம், குணத்தைத் தருமா?

K. S. வேங்கடரமணி அவர்களின் ஆங்கில நூலைப் படித்த மேல்நாட்டு மேதைகளான, அனிபெசண்டு, A. C. பென்சன், வார்டு, E. V. லூகஸ். முதலானவர்கள் இந்த நூலின் சிறப்பைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். லண்டன் TIMES LITERARY SUPPLEMENT இலக்கியப் பத்திரிகையும், Hindu, Indian Review, New York Times முதலான பத்திரிகைகளும், இந்த நூலின் கருத்தாழத்தை யும் நடைப்பொலிவையும் பற்றி மிக அருமையான மதிப் புரைகள் வழங்கியிருக்கின்றன.

எந்த நடைக்கும் ஜீவிய சாகசம் வேண்டும் என்று வால்டர் பேடர் (WALTER PATER) கூறுவது போல மூல ஆசிரியரின் ஆங்கில நடையிலே, தெளிந்த உயிரோட்டம் அபரிமிதமாகவே காணப்படுகிறது. அவர் நடையிலே, எவ்வித தடையோ, தடங்கலோ, தயக்கமோ இல்லை; மிகச் சரளமாகவே ஓடோடிவருகிறது, சிந்தனை வெள்ளம். மொழிபெயர்ப்பிலும், அந்த இலக்கிய மின்னல் தவழ்ந்தோடுகிறது.

இந்த நூலை எத்தனை முறை வேண்டுமானாலும், திரும்பத் திரும்பப் படித்து, தொடர்ந்த இன்பத்தை, என்றும் அனுபவிக்கலாம். சிறு மாணவன் முதல், முதி யோர் வரை, இந்த நூலைப் படித்து இன்புறலாம். தாகூரின் 'கீதாஞ்சலி'யைப் போலவே, இந்த நூல் விரைவில் சிறப்படைவதும் திண்ணம். உலகமே புகழக் கூடிய அளவுக்கு, 'சிந்தனை முழக்கம்' முன்னேறுவதும் உறுதிதான்.

இந்த நூலை எல்லோரும் ஆர்வத்துடன் ஆதரித்தால், ஏராளமான பிரதிகள் விரைவில் அடுத்த பதிப்பில் குறைந்த விலையிலே, மலிவுப் பதிப்பாகவே வெளியிட முயற்சி செய்யலாம் அல்லவா? ஆகவே எல்லோரும் இந்த நூலின் சிறப்பை உணர்ந்து, ஆதரிக்க வேண்டுகிறேன்.

காரைக்குடி
7—3—1963

V. R. M. செட்டியார். B. A.

APPRECIATION

By V. R. M. Chettiar B. A.

On the banks of the Cauvery, K. S. Venkatramani deeply muses and meditates, and recollects all the melancholy reminiscences of life in the modern world of stained existence. In politics, ethics, economics, religion and caste, the modern man has hopelessly deteriorated, as he goes against the purity and tranquillity of God's creative design, ruffling the peaceful progress of humanity in all its graceful avenues of natural growth. Life's plenty vanishes, and there is a penitential poverty of spirit, ravaging the radiant peaks of the divine splendour in our ephemeral existence.

Man robs man recklessly; and any government, losing its sanity of vision, tolerates a peculiar chaos of legislation which suddenly arrests human happiness and peaceful progress. The poor man weeps; he sheds tears often, and the universal peace is shattered to shreds, when the sinner is allowed to ravage rampantly the splintered world in chaos.

K. S. V's musings on the sand-dunes of the Cauvery have a sacred simplicity, universality

and vitality, like the lofty message of Walt Whitman in his "LEAVES OF GRASS"; and sublime thoughts sing poignantly, waking up man's dormant spirituality. Tiny telling words fetch God and man and soul simultaneously, reminding us that the delinquent cannot escape the critical burden of eventual moral crisis.

Sri. T. R. Sarma's Tamil rendering is so delicately true to the original that it flows naturally and transparently and enjoyably too. He certainly deserves to be congratulated on this successful venture in the literary field.

Dear friends! Muse profoundly and restore cosmos, so that man may smile again with a growing optimism in the order of the universe.

Karaikudi }
7-3-1963 }

V. R. M. Chettiar. B. A.

"சிந்தனை முழக்கம்"

தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையைப் போல, சூரியன் ஒரு மேகக் கூட்டத்தின் மத்தியில் காணப்படுகிறன். அந்தி நேரம். ஆனந்தமயமாக இருக்கிறது. ஒரு அபூர்வ மான இனிய சாந்தம் வானமெங்கும் நிறைந் திருக்கிறது. கடற்கரையிலும், கடலிலும் அமைதி ஆட்சிசெலுத்துகிறது. காற்ருல் அலைக்கப்பட்டு, ஆங்காங்கு கடற்கரை யெங்கும் அழகான குவியல் களாக மணற்திட்டுக்கள் சிதறிக்கிடக்கின்றன. ஆற்றின் மீதும், கடற்கரையிலும், கடலிலும் ஒளி வீசுகின்ற பொன்னிறமான மாலை வெயிலில் அவைகள் மின்னுகின்றன.

தாள லயம் தவருமல் அலைகள் கடலில் உயரப் பொங்கி எழும்புவதும், பின்பு தானே தணிந்து கீழே விழுவதுமாகக் காணப்படுகின்றன. ஆழ் கடலின் அலைகள் ஒன்றின்பின் ஒன்ருக வந்து கடற்கரையையும், ஆற்றையும் அன்புடன் தழுவிக் கொள்கின்றன. சுவடேதும் படியாத அந்தக்கடற் கரை மணலின் மீது, அலைகள் தம் அழகிய நுரை களை, அன்பின் அடையாளங்களாக விட்டுச் செல் கின்றன. நீர்ச்சுழல்களாகிய கண்களுடனும், நிறைந்த காதலுடனும், நெடுந்தூரம் விரைந் தோடிவரும் கன்னி காவேரி, தன்னை மறந்த

நிலையில் வேகமாகக் கடலை அடைகிறாள். காதல் வசப்பட்ட கருநாகம்போல, இடைவிடாத பெரு மூச்சுடன் ஒலித்துக்கொண்டிருக்கும் கடல் தன் தலையை உயர்த்திக் கரையை நோக்கிப் பாய்ந்து செல்லுகிறது. உருண்டோடிவரும் ஆற்றுடன் கலந்து, ஒன்ருகிக் கட்டித் தழுவிக்கொள்கிறது. மிகுந்த வேகத்துடன் பாய்ந்து வரும் ஆறும், ஆவலுடன் நெருங்கி வரும் கடலும் காதல் மிகுதி யால் சந்திக்கும் இடத்தில், அழகு தவழும் நீர்ப் பரப்பாகிய முகத்தில் காதலை வெளியிடும் சின்னஞ் சிறு நீர்ச்சுழிகள் தோன்றுகின்றன.

களிப்புடன் காற்று இனிமையாக வீசுகிறது. ஆனந்த மிகுதியால் அது அலைகளின் மீது குதூ கலத்துடன் சவாரியல்லவா செய்கிறது! ஓடிக் கொண்டிருக்கும் நீரின் மீதும், ஓரத்தில் ஒதுங்கிக் கிடக்கும் நுரைகளின் மீதும் காற்று மிக்க மகிழ்ச்சி யுடன் குதித்து விளையாடுகிறது. வாழ்க்கைக்குப் புத்துயிர் ஊட்டி, உற்சாகத்துடன் வேலை செய்யும் படி செய்து, எங்கும் ஒரே இன்பமயமாக இருக் கிறது. ஆற்றுக்குக் கடல்உண்டு. மலருக்கு வண்டு உண்டு. ஆனல், நான் இம்மணல் திட்டுக்களின் மீது உட்கார்ந்துகொண்டு, துணையொருவருமின்றி தன்னந்தனியே இருக்கிறேன். எட்டாதவைகளைப்

பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக் கிடக்கிறேன். மணற் பரப்பின் மீது ஒளிவீசிக் கொண்டிருந்த சாயங்கால சூரியனின் பொற்கிரணங்கள் மெது வாக மறைந்து கொண்டிருக்கின்றன. கடற்கரை யிலும், கடலிலேயும், எங்கும் இருள் வந்து கவிழ்ந்து கொள்கிறது. சுற்றிலும் ஒரே இருட்டு. ஒரு சப்தமில்லை. எங்கும் ஆழ்ந்த அமைதி குடி கொண்டிருக்கிறது. ஒலிக்கடல், பெருமூச்சிடும் ஆறு, சிதறிக் கிடக்கும் மணற்பரப்பின் மீது தனித் துக்கிடக்கும் எளியவனுகிய நான், ஆகிய எங்களைத் தவிர எங்கும் ஒரே அமைதி.

II

சாசுவதமான விழிப்புடன் கூடிய சாந்தத் துடன், ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பலதோன்றிக் கொண்டிருக்கின்றன. வான வீதியில் தங்களுடைய முடிவற்ற பாதையின் வழியேசஞ்சரித்துக்கொண்டு மின்னும் ஜொலிக்கும் நட்சத்திரங்களின் இன்னி சையைக் கேட்டு இன்புறுவதற்காகச் சற்றே அமைதியாக நின்று கொண்டிருப்பதுபோலக் கடல் சாந்தமாக இருக்கிறது. பிரகாசமான தகடுபோல் காணப்படும் மின்னும் வானத்தின் விநோதக் கதையையும், பாம்புபோல் வளைந்தோடும் ஆற்றின் அதிசயக் கதையையும், ஒன்றன்பின் ஒன்ருக வரும்

அலைகளின் மூலம் நட்சத்திரங்களிடம்தான் பதிலுக்கு எடுத்துச் சொல்லவும், கடல் கொஞ்சம் அமைதியாக இருக்கிறது. பழையதேயானாலும் என்றும் புதுமையாகத் தோன்றும் தன் ஓய்வு இல்லாது அலையும் அலைகளின் மூலம், ஆவலுடன் கேட்க விரும்பும் கடற்கரைக்கும், வளைந்தோடும் ஆற்றுக்கும், ஒலிக்கும் கடலின் தன் புராதனமான செய்தியை எடுத்துச் சொல்வதற்காகத்தான் கடல் அப்படி அமைதியாக இருக்கின்றது போலும்!

அலைகடலின் எல்லையற்ற ஆரவாரத்தைக் கவனித்துக்கொண்டே, காவிரி நதியின் மணற் பாங்கான கரையோரங்களில் உள்ள அழகான சிறு கூழாங்கற்களையும், கிளிஞ்சல்களையும் நான் பொறுக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனம் மிகுந்த சோர்வை அடைந்தது. ஒரு வித மயக்கம் மேலிட்டது. துயரம் மிகுந்தது. இம்மாய வாழ்வை எண்ணி வருந்தினேன், நிலம்—நீர்—காற்று—ஆகாயம்—ஆகிய பூதங்கள், இவ்வுலகின் அந்தராத்மா, மிகுந்த இரகசியமான ஆழ்ந்த அத்வைத உண்மைகளை எடுத்துரைப்பது போலத் தோன்றுகின்றது. புனிதமான, சாந்தம் நிறைந்த இந்தச் சாயங்கால நேரத்தில் இயற்கை அழகை அனுபவித்து ஆனந்தமடைந்து, இளங்காற்றுடன்

வரும் இன்னிசையில் மகிழ்ந்து, ஆற்றையும் கடலை யும் நோக்கி அமர்ந்திருக்கும் ஒரு பரிசுத்தமான பக்தனுக்கு உன்னதமான வாழ்க்கைத் தத்துவங் களை இவ்வுலகின் ஆன்மா உபதேசிக்கிறது. விண் மீன்கள் மின்னும் ஆகாயத்தின் சிருஷ்டிச் சக்தி வாய்ந்த இந்தத் தனிமையை இக்கடற்கரையிலே காணலாம்.

என்னைச் சுற்றிலும் வாழ்க்கையின் மாய நர்த் தனம் மனோகரமாக நடைபெறுகின்றது. இயற் கைத் தேவியின் தளர்ச்சியற்ற மகாசக்தியை இதய பரவசத்துடனும், அதிசயம் நிறைந்த மனத் துடனும் நான் அமைதியுடனிருந்து பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். போராட்டங்கள் நிறைந்த இந்த உலகத்தில், உற்சாகத்துடன் தன்னலம் மறந்த வாழ்க்கை நடத்திப் புனிதமான தெய்வீகக் காரியங்களைச் செய்ய, விழித்தெழும்படியாக இறைவன் எனக்கு அருள்புரிவாராக. கடவுள் தன் எல்லையற்ற கருணை வெள்ளம் பெருகிடும் நேரத்தில், தன்னுடைய இதந்தரும் பாதத்தின் கட்டை விரலால் தொட்டு என்னை மகத்தான சக்தி உடையவனுகச் செய்யட்டும்!

III

இந்தக் காவிரி நதியின் முகத்துவாரத்தில்

ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் இம்மணற் திட்டுக்கள் ஜனசந்தடியற்ற, சாலைகளின் புழுதி உபத்திரவ மின்றி இருக்கும் அழகானதொரு தனியிடமாக அமைந்திருக்கிறது. அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்றுத் திகழ்ந்ததொரு இராஜதானி நகரம் இங்கே, இதனடியில் புதையுண்டு கிடக்கிறது. ஏறக்குறைய பத்துமைல்கள் பரப்புள்ள, சோழ மன்னன் கரிகாலன் இருந்து அரசாட்சி செய்த புகழ்பெற்ற நகரமாகும் அது; பண்டைக் காலத்து ரோம-எகிப்திய-கிரேக்க அல்லது பாபிலோனிய நாகரிக அமைப்புக்கு நிகரான வலிமை மிகுந்த உயர்ந்த நாகரிக வாழ்வு வளர்ந்த தொட்டிலாக ஒரு காலத்தில் அது திகழ்ந்தது. ஆனால், இன்று, அந்தப் பெரும் புகழ் ஒளி வீசிய இந்த இடத்தில், நாம் காண்பதெல்லாம், இந்தப் பத்துச் சதுரமைல் பரப்புள்ள இம்மணல் வெளிதான். குறிப்பான பாதையேதுமில்லாத, இளங்காற்று வீசிக்கொண் டிருக்கும் பல மைல்கள் பரந்துள்ள, பரிசுத்தமான இம்மணல் வெளியில் மனிதனின் சின்னுள் வெற்றி யின் சின்னம் ஏதும் இப்பொழுது இங்கு காணப்பட வில்லை.

III

இங்கு, வாழ்வில் முன்னேற விரும்பும் மக்களின் கூட்டம் நிறைந்த பெரும் சந்தைகள்

காணப்பட்டதும், பேரழகுடன் திகழ்ந்த பெண்களின் ஸ்நான கட்டமாக இது விளங்கியதும், ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளாகி விட்டன. ஆனால் இப்பொழுது இக் கடற்கரை மணல் வெளியில் தனிமையின் இனிய மணம் கமழ்கின்றது. ஆழ் கடலின் அலைஓசை காதில் ஒலிக்கிறது. உயர்ந்த வீடுகளின் மாடங்களோ, கோபுரங்களோ, வேறு எவ்வித தடையுமின்றி உலவிவரும் இனிய காற்று கடல் கீதம் பாடுகிறது. பல மைல்கள் பரந்துள்ள இப்பெரும் மணல்வெளியில் காற்று வேடிக்கையாக விளையாடுவதுபோல் பல இடங்களில் மணலை அழகிய திட்டுக்களாகக் குவிக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம், மக்கள் எல்லோரும் ஓய்ந்து உறங்கும் வேளையில், இங்கு இரவின் இன்ப மோகத்தில், ஆறும் கடலும் கலந்து கலியாண விளையாட்டுக்கள் விளையாடுவதற்காகத்தான், காற்று இம்மணல் திட்டுக்களை அமைத்திருக்கிறது போலும்! கற்பனை கரைபுரண்டோடும்படியாக சிந்தனை செய்து களிக்க இம்மணற் திட்டுக்கள் மிகவும் தகுந்த இடம். ஓய்வுடன் அமைதியாக உட்கார்ந்து கொண்டு நடந்தவைகளைப் பற்றியெல்லாம் நினைத்து மனோராஜ்யம் செய்து மகிழ்ச்சியடைய இது நல்ல இடம். நாகரிக வாழ்க்கையின்

நிர்ப்பந்தமான அலுவல்கள், வீண் ஆடம்பரங்கள் இவைகளை வெறுத்து, நான் என் வாழ்நாளெல்லாம் அல்லும் பகலும் எல்லையற்ற இவ்விரிகடல், வளைந்தோடி வரும் இவ்வாறு, மென்மையாகத் தழுவி, முத்தமிடும் காற்று உலவும், சதா விழிப்புடனுள்ள, மாறுபாடடையாத இம்மணற் திட்டுக்கள், இவைகளின் மத்தியிலேயே விருப்புடன் வாழ்வேன்.

அந்தோ! மனிதர்களிடமிருந்தும் என்னிடமிருந்தும், மனித வாழ்வின் ஆரம்ப நாட்களின் முதல் அமைப்பில் காணப்பட்ட கலப்பற்ற பரிசுத்தமான இன்பத்தை, இனிஉங்களுக்கு இல்லை என்று இன்றைய நாகரிகம் எடுத்துச் சென்று விட்டதா?

ஆ! நகரத்தின் ஜன நெருக்கமான சின்னஞ் சிறு அறைகளில் வேலை செய்யவும், அவசரம் அவசரமாக அலுவல்களைக் கவனிக்கும் மக்கள் நடமாடும் பெரும் தெருக்களில் அவர்களுடன் நானும் செல்லவும், நான் சீக்கிரம் திரும்பிச்செல்ல வேண்டியதுதான்.

இறைவனின் முதல் படைப்புக்களான நிலம், நீர், காற்று, மழை, சூரிய வெளிச்சம், நட்சத்திரங்கள் ஆகிய இவ்வியற்கை நண்பர்களின் இனிய தோழமையை நான் விட்டுவிட வேண்டியதுதான்.

காற்று உலவுவதும், கடல்அலை வந்து தழுவுவதும் ஆகிய இம்மணல் வெளியை – ஆற்றங் கரையும், ஆறும், கடலும், வானமும் சாந்திமயமான சாயங் காலத்தில் வீசும் இதந்தரும் இளம் காற்று ஆகிய, முதன் முதலில் இயற்கைத் தெய்வம் தந்த இனிய அன்புப் பரிசுகளை—விட்டுப் பிரிந்து நான் எப்படிச் செல்வேன்?

ஆனால்,...........அந்தோ! இனி இந்த மணற் திட்டுக்களில்கூட, இந்த இன்ப வெள்ளமெல்லாம் எந்த அளவிலும் எனக்குக்கிடையாது. ஆற்றுக்குக் கடல் உண்டு; மலருக்கு வண்டுஉண்டு; என்வாழ்வு என்னுடனேயே முடிந்துவிடும். எட்டாத பொருள் களைப் பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டு, மாறிவிடக்கூடிய இம்மணல் மேடுகளில், துணை யொருவருமின்றி, நான் தனியாய் இருக்கிறேன்.

IV

என்னைச் சுற்றிலும் ஏராளமான செடி, கொடி கள் செழித்து வளர்ந்திருக்கின்றன. மகுடம் சூடியதுபோல, மலர்களைக்கொண்ட படரும் சிறு கொடிகள், பாதையில் நான் கால்வைத்து நடக்கும் ஒவ்வொரு அடியிலும் மலர்ந்த முகத்துடன் வர வேற்கின்றன. ஆற்றங் கரையிலுள்ள மரங்கள் கிளைகள் தாங்க முடியாதபடி ஏராளமாகப் பழுத்துக்

குலுங்குகின்றன. மரக்கிளைகளில் புள்ளினங்கள் குதூகலமாகப் பாடிக்கொண்டிருக்கின்றன. ஆடு, மாடுகள் ஆனந்த மிகுதியால் குரல் எழுப்பிக் கும்மாளம் போடுகின்றன. ஏனெனில், வருஷ முழுவதிலுமே இந்த மாதங்கள்தானே சுகமான பருவகாலம்.

இப்புல் வெளியில் வாழ்க்கை ஆனந்தமயமாக இருக்கிறது. புற்களின் நுனியில் பனித்துளிகள் ஜொலிக்கின்றன. சோளப் பயிர்கள் வயல்களில் செழித்துக் கிடக்கின்றன. நாளை அறுவடையின் போது பாடப்படும் அறுவடைக்கீதம், இப்பொழுதே எங்கும் ஒலிக்கிறது. எல்லோருடைய இதயங் களிலும் மனநிறைவு என்னும் இன்னிசை முழங்கு கிறது. இயற்கை அளித்த ஒளிமுத்துப்போல் விளங்கும் பனித்துளியைத் தலையில் தாங்கி நிற்கும் புற்கள் முதல், தீராத காதலுடன் அலை அலையாகத் தன்கையை நீட்டி ஆற்றை அடைய விரும்பும் அந்த விரிகடல் வரையில், எங்கும் இன்பமயமான காட்சிகள் காணப்படுகின்றன.

அழகு ராணிபோல கம்பீரமான நடையுடன் எல்லையற்ற செழிப்பின் காரணமாக புன்னகை யுடன், தான் பாய்வதனுல் வளம் நிறைந்து விளங் கும் பயிர்களைக்கண்டு களித்து, அந்தக் காவிரி நதி

சின்னஞ்சிறு காதல் சுழல்களுடன் சுழித்துச் சுழித்துக்கொண்டே செல்கிறது.

கிராமம் ஜீவகளை நிறைந்து விளங்குகிறது. சாந்தம் நிறைந்த பக்தர்கள் கூட்டம் கோவிலில் நிறைந்திருக்கிறது. கணேசமூர்த்தியின் முன்பாக சிதறு தேங்காய் எப்பொழுது உடைக்கப்போகிறார்கள் என்று ஆவலுடன் சிறுவர்களும், சிறுமிகளும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சுவாமியின் முன்பு குருக்கள் மணியடித்துக் கொண்டிருக்கும்போது, சுவாரஸ்யமான பேச்சுக்கள் ஜனங்களிடையே நடந்து கொண்டிருக்கின்றன. வாழ்வின் சிறு சிறு பகுதிகளான ஒவ்வொரு நாளும், எல்லோருக்கும் தலைவரான இறைவன் முன்பு வணக்கமுடன் சொல்லிக்கொள்ள எத்தனை நிகழ்ச்சிகள் நிறைந்து கிடக்கின்றன. ஆற்றின் ஆரவாரத்துடனும், கடலின் அலை ஓசையுடனும் கலந்து, இனிமையாக, அமைதியாக, கணீரென ஒலிக்கும் வெண்கலத்தாலான கோவில் மணியோசை இம்மணற்திட்டுக்கள் மீதுள்ள என் காதில் ஒலிக்கிறது. மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இதமளிக்கும் புனிதமான இந்தமாலை நேரம் எளியவனாகிய எனக்குமட்டும் இல்லை என்று என்னிடம் சொல்கிறது. எல்லா மூர்த்திகளுக்கும், புனிதமான ஒவ்வொரு சந்நிதியிலும் சென்று

கற்பூரத்தைக் கொளுத்திக் காட்டித் துதித்துப்பாடி ஒரு காலத்தில் நானும் அந்தப் பக்தர்கள் கூட்டத்தில் ஒருவனுக இருந்தேன்.

ஆனுல், ஜீவசக்தி நிறைந்த, ஆனந்தமயமான இந்தக் காட்சிக்கு இப்பொழுது நான் அன்னியனுக இருக்கிறேன். ஏனெனில் என் உள்ளம் இப்பொழுது வேறு எங்கோ இருக்கிறது.

கடைசியில் பயனற்றுப்போகிற, வீணுன வாழ்க்கையின், துன்பத்தை எண்ணி எண்ணித் துயரப்பட்டுக்கொண்டிருக்கிறேன். அதனுடைய முதுமையை நினைந்து களைத்துப்போனேன். வாழ்வின் வறட்சியை, வெறுமையை எண்ணி, மனம் நைந்துவிட்டேன். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் மட்டுமே என்னை நேசத்துடன் கண்ணைச் சிமிட்டி வரவேற்கின்றன.

இப்பூவுலகில் எங்கேனும் காணப்படும் வாழ்க்கை இன்பம், எனக்கு மட்டும் இல்லை. ஆற்றுக்குக் கடல் உண்டு; மலருக்கு வண்டு உண்டு; விட்டு விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் மின்னொளியிலும், பொன்போல் ஒளிவீசும் கடல் நீர்ப்பரப்பின் அழகிலும் மனதைப் பறிகொடுத்து இம்மணற் திட்டுக்களில் துணையொருவருமின்றி உட்கார்ந்து கொண்டிருக்கும்

நான் மட்டும் தனியாய் இருக்கிறேன்.

V

ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு விதமாகக் காட்சி அளிக்கிறது. இம்மணல் வெளியும் ஒவ் வொரு விதமாகத் தோற்றமளிக்கிறது. சோம்பேறி யான காற்று தன் மனம் போனபடி எங்கும் வீசிக் கொண்டிருக்கிறது. குறைந்த பட்சம் ஏழு வருடங் களுக்கு ஒரு முறைகூட, ஏன் நான் மட்டும் என் வாழ்வில் ஒருமாறுதல் காணக்கூடாது? எல்லாச் சுதந்திரங்களேயும் துறந்து, ஒரு களியாட்டமும் இன்றி, இந்த அடக்கம் நிறைந்த இம் மனிதப் பிறவி மட்டும் எப்பொழுதும் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டியதுதானு?

தனிமையாக துக்கத்துடன் இதோ நான் இருக்கிறேன். என்னேச் சுற்றிலும் ஒவ்வொரு பொருளிலும் வாழ்வின் கடைசியான மரணத் துயரத்தின் கண்ணீர் துளித்திருப்பதைக் காண் கிறேன். மிதக்கும் துரும்பு - ஓடும் ஆறு - இதழ் அவிழ்ந்து மலரும் மொட்டு - சற்றுமுன் பிறந்த குழந்தை ஒவ்வொன்றிலும் தான் இத்துயரத்தை நான் காண்கிறேன். வாழ்வே சாவு. பிறப்பே இறப்பு. வாழ்வே அழிவு. கவிஞர்களும், வேதாந்தி களும் தங்கள் இனிய வார்த்தைகளால் வேண்டு

மானல் இவ்வுண்மையை இன்னும் இனிப்பாகச் சொல்லட்டும். அதிகாலையில், விடிவதற்குச் சற்று முன்பாக, உறங்கிக்கொண்டிருக்கும்போது கண்ட ஒரு கனவு கலைந்துவிட்டதுபோல, படைப்புத் தொழிலில் உள்ள சோகபாவம் அடிக்கடி என் மனத்தில் தோன்றிக்கொண்டே இருக்கிறது. துன்ப ஒலிபெருக்கும் கடல் நீரிலிருந்து உவர்ப்புச் சுவையைப்பிரிக்கவேமுடியாது;அதுபோலஇவ்வுலக வாழ்க்கையிலிருந்து துன்பத்தையும் பிரிக்கவே முடியாது போலிருக்கிறது. இன்பமோ - துன்பமோ என்னை எதுவும் அசைக்கிறதில்லை. பூமியில் பெரு வெள்ளம் பெருகச்செய்யும் மாரி மழையையும், கடலில் பொழியும் பெருமழையையும் போலவே, தொழிலும் இயக்கமும் எல்லாம் முடிவில் துன்ப மயமான வீண் காரியந்தான்.

[4]

வாழ்வென்னும் பெருங்கிளையில் ஒடிக்கப்பட்ட சிறு குச்சிகள் போல, நாம் உலக வாழ்வென்னும் ஆற்றிலே வெகுதூரம் மிதந்து வந்துவிட்டோம். வாழ்வு என்னும் ஆற்றின் போக்கில், நாம் அடிக்கடி மூழ்கியும், பின்பு எழுந்து மிதந்தும், வழியில் காணும் சிறு சிறு சுழல்களைக் கண்டுகளித்துக்கொண்டும், வாழ்வின் அதிவேகமான எண்

ணற்ற மாறுபாடுகளைப் பார்த்துக் கொண்டும், வெகுதூரம் வந்துவிட்டோம்.

[5]

ஆனால், கண நேரவாழ்வையுடைய நீர்க் குமிழிகள்கூட பல வகையான எண்ணங்களை உடையவைகளாயிருக்கின்றன. அவைகளைப் போலவே நாமும் என்றைக்காவது ஒரு நாள் சாந்திமயமான அமைதியை, அழிவற்ற பேரின் பத்தை அடையவேண்டும் என்ற நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறோம். நிச்சயமற்ற முறையில் எவ்வித அறிவிப்புமின்றி அதிசயமான காலசக்கரம் தான், நம் வாழ்வை புதுப்பிக்கிறது.

[6]

ஒரு சின்னஞ்சிறு நீரோடை வறண்ட மணல் வெளியில் கொஞ்சதூரம் ஓடிச்சென்று, பின்பு அதிலேயே அந்த நீரோடை மறைந்து விடுகிறது. ஆனால், அன்னையாகிய மகா சமுத்திரம் தன் அன்பு மிகுந்த பெண்களாகிற நீர்த்துளிகளை மீண்டும் பெற்று, தன்னிடத்தில் கொஞ்சகாலம் வைத்திருந்து, பிறகு பருவக்காற்று அழைக்கும்போது திரும்பவும் அவைகளைத் தீரமுடன் அனுப்பி வைக்கிறது.

அதுபோலவேதான், வாழ்க்கைச் சக்கரத்தின்

சுழற்சியும். வாழ்க்கை என்ருல் என்ன? என்று வானத்தில் அதோ மின்னொளி வீசும் நட்சத்திரங்கள் ஒரு கேள்வி கேட்கின்றன.

V

[1]

மழைபெய்யும் நாட்களில் மழைத்தண்ணீரின் மீது தோன்றும் நீர்க்குமிழிகள்தானு? நீர்வீழ்ச்சியில் தண்ணீர் விழுகின்றஇடத்தில் தோன்றும் நுரைகள்தானு? பலவிதக் காட்சிகளைக் காட்டும் வானத்தில் காணப்படும் வானவில்தானே? சந்திரனின் மத்தியில் காணப்படும் மேகம் போன்ற களங்கமோ? அல்லது சூரியனில் காணப்படும் புள்ளிகள் தானே? காதலையும் சுதந்திரத்தையும் வேண்டி அதிசயமான தாகத்துடன் எப்பொழுதும், காரணமேதும் அறியாமல் கடலுக்கும் கரைக்கும் இடைவிடாத போக்குவரத்து உடையதும், பெருகிப் பின்பு வடிவதும் இயல்பாக உடையதுமான அந்த அலைதானே? கரையில் மோதும் சிறு அலைகளின் பிரகாசமான ஒளிதானே? மலர்ந்து அடுத்த மணியில் வாடி விடுகிற மலர்தானே? அல்லது, இப்பொழுது நான் இழந்துவிட்டிருக்கிறேனே, எனக்கு இனிமேல் இல்லை என்று, அந்தப் பிள்ளைப் பிராயம்தானே?

[2]

மௌனம், மேலும் ஆழ்ந்த நிசப்தமாக ஆகிறது. கடலின் ஆழத்திலிருந்தோ, வானத்தின் உச்சியிலிருந்தோ, எங்கிருந்தும் எனக்கு எந்த விடையும் கிடைக்கவில்லை. எத்தனையோ யுகங்களாகச் செய்து வருவதுபோலவே, தாளலயந் தவறுதவாறு, நிஷ்டூரமான புன்சிரிப்பைக் காட்டி நட்சத்திரங்கள் தொடர்ந்து மின்னுகின்றன. இம்மணற் திட்டின் சிறு மணற் தூசுடன் கூடிய கடல் நீர்த்துளியை, தீங்கறியாத உள்ளத்துடன் என் கண்களின்மீது சதா அங்குமிங்கும் அலைந்து திரியும் காற்று தெறித்து விடுகிறது.

[3]

கோவில்மணி வீணில் என் காதில் இடைவிடாது ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ஏனெனில், அது தேவர்களிடமிருந்து எனக்கு ஏதும் செய்தியைக் கொண்டுவரவில்லை. உருக்கி வார்த்த, அடித்தெடுத்த வெண்கலத்தின் காதைத் துளைக்கும் ஓசைதான் கேட்கிறது. பாலைவனத்தில் வீசும் பயங்கரமான, பாழ்படுத்தும் காற்றைப் போல, என் இருண்டவனந்தரமாகிய இதயத்தில், கிராம வாழ்க்கையின் மெலிந்த ஓசை, இன்குரல் பழகும் இளம் பெண்களின் இன்னிசையுடன் என்

காதில் ஒலிக்கிறது. கடலிலும், கரையிலும், எங்கும் காணப்படும் வாழ்க்கைத் துன்பங்களையும், செயல் புரிவதிலுள்ள சிரமங்களையும்தான் கடலின் தன்னந்தனியான இடத்தில் கேட்கும் முணுமுணுப் புக்கள், முறைப்பாடுகள் எனக்கு நினைப்பூட்டு கின்றன.

ஆதரவற்ற, ஆனால் மிக எளிய என்னைக் கருணை மிகுந்த கடவுள் தனது அருட்கரங்களால் தொட்டு, எனக்கு அருள்பாலிக்கட்டும். உண்மை யான மன அமைதியை ஒரு மணி நேரமாவது எனக்கு அளிக்கட்டும். எனக்கு முடிவான முத்திநெறியைக் காட்டட்டும்.

VII

[1]

நகரத்தில் வாழும் மனிதனே! மனிதர்களின் தலைமைக்காகவே பிறந்தவனே! வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வல்லவனே! விவேக மிகுந்தவனே! உபயோக மற்ற இம்மணற் திட்டுக்களில் துன்பங் களை எண்ணி எண்ணித் துயரப்பட்டுக்கொண்டிருக் கும் எளியவனான எனக்கு, உனது நாகரிக வாழ் வைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவாயாக! உலகில் ஒவ்வொன்றையும் பெரும் பிரச்னைகளாகவும், கடும் சிக்கலாகவும் அது ஆக்கி இருக்கின்றதே - ஏன்

அது மிக அழகிய ஒரு மலரைக்கூட, கிருமிகளின் கூடாகக் கருதும்படி செய்திருக்கிறதே!

[2]

மிகுந்த ஊக்கமுடன் செயல்கள் நடைபெறும் இந்த உலகத்தில், உழுதுபோட்ட நிலத்தில் களைகள் செழித்து வளர்வதுபோல, துன்பமும் தன்னலமும் வளர்கின்றன. கரையில் மோதிப் பிறகு, கடலை நோக்கி வேகமாகப் பின்வாங்கும் அலையைப்போல், இன்பம் நம்மைவிட்டுப் பறந்து போகிறது. மனிதன் தோற்றத்தில் மேலும் மேலும் பருமனுகவளர்கின்ருன். ஆனுல், உள்ளொளியில் வரவரக் குறைந்துபோகின்ருன். வாழ்க்கையின் உண்மையான மடைகள் மணல் நிறைந்து தூர்ந்து போய்க்கொண்டிருக்கின்றன. அழிவற்ற தர்ம மார்க்கங்கள் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்றன. மனித முயற்சிகள் யாவும் வீண் என்று தோன்று கிறது. வாழ்க்கையின் மிகப்பழமையான வழிகளில் மிகுந்த துயரங்களும், பெருங்கஷ்டங்களும் ஆழ மான தடங்களை விட்டுவைத்திருக்கின்றன. அந்தப் பாதையைச் சீர்திருத்த வந்தவர்கள் தங்கள் கையிலுள்ள கருவிகளை, விளையாட்டுப் பொம்மைகளாக ஆக்கிக்கொண்டார்கள். துன்ப வடுக்களால் மனிதனின் முகம் முழுவதும் கருகி

யுள்ளன. கடவுள் மிக்க அன்புடனும் சிரத்தை யுடனும் படைக்கிருர். மனிதன் சிறிதும் சிந்திக் காமல் அழிக்கிருன்.

[3]

துன்பம், தன்னகத்தே மணம்மிகுந்தகஸ்தூரிப் பையைப் பெற்றிருக்கிறது. அதை அடையும் விதத்தை மட்டும் நீ அறிந்துகொண்டுவிட்டால், அது உயிர் தரும் சக்தி உடையதாக இருப்பதையும், தெய்வீக சக்தி தரும் செய்தியைப் பெற்றிருப் பதையும் அறிவாய். ஒயின் தயாரிப்பதற்காக திராட்சைப் பழங்களைப் பிழிவதுபோல, வாழ்க்கை யைத் துன்பம் பிழிந்தெடுத்து, இனிய ரசமாக்கு கிறது. இருண்டு கிடக்கும் சந்தில், துன்பம் ஒரு சுடர் விளக்கு. அதுவே பழமையான ஒரே புத்தகம் மனிதனுக்கு இருக்கிறது. இறைவனின் இரகசிய போதனைகள் அந்தப் புத்தகத்தில் பொன் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

பல தலைமுறைகளில் செய்த பாவங்களையெல் லாம் துன்பமாகிய அந்த இரசாயனப் பெருநெருப் பில்தான் மனிதன் பரிசுத்தப்படுத்திக்கொள்ள முடியும். கர்மாவாகிற தாமிரத்தகட்டை மாற்று உயர்ந்த பொற்தகடாக அந்தத் துன்பமென்னும் அக்கினியின் மூலம்தான் மாற்றிக்கொள்ள முடியும்.

மறுபிறவியற்ற ஒரு வாழ்க்கையை அத்தகைய துன்பத்தின் மூலமே பெற முடியும். மனிதன் தன் மாசுகள் அனைத்தையும் தானே போக்கிக்கொள்ள முடியும். தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு மெதுவாக மாற்றிக்கொண்டு, ஒருபுதிய உயிராக, முற்றிலும் பரிசுத்தமாக, தன்னலமற்று, பிரகாச மான வாழ்வை மனிதன் பெற முடியும். துன்பம், மனிதனுக்கு கடவுளின் சொந்த, உயர்வான விசேஷமான வெகுமதி; ஏன், துன்பத்தை, மனிதன் தனக்குத் தானே தேர்ந்தெடுத்துக்கொண்ட ஒரு பரிசு என்றுகூட சொல்லலாம்.

VIII

[1]

உலகின் பொருள்களை அடைகிற விஷயத்தில், செல்வந்தர், மேலும் மிகுந்த செல்வமுடையவரா கின்றார். ஏழை, இன்னும் பரம ஏழையாக ஆகின்றான். ஆனால், அருட்சோதியான ஆண்டவனின் முன்பு இருவரும் மிக மிக ஏழைகளே. நவீனகாலத்து நாகரிக மனிதனின் உயரமான தோற்றத்தில், நிலையில் ஒரு கூனல் காணப்படுகிறது. மிகப் பெரியதொரு கட்டி டத்தின் சுவரில் ஒரு பிளவு தெரிகிறது. வாழ்க்கையாகிய ஆடையில் ஒரு கிழிசல் புலனு

கிறது. தனி மனிதனின் ஒழுங்கான நடவடிக்கைகள், சமுதாயத்தின் ஒழுங்கற்ற குழப்பத்தில் அழிந்து போயிருக்கிறது.

[2]

ஹே! நாகரிக மனிதனே! அழகுமிகுந்த பூரணமான உன் ஆடையலங்காரங்களுக்கும், தோற்றத்திற்கும், நீ சிறிதும் தகுதியற்றவன். உன் உதட்டில்—உன் பேச்சில்—வினயம் நிறைந்திருக்கலாம். உன் பேச்சு இனிமையும் மென்மையும் உடையதாக இருக்கலாம். ஆனால், உன் இதயம் தவருன பேராசைகளால் துடித்துக்கொண்டிருக்கிறது. கொள்ளை லாபம் சம்பாதிப்பதிலும், பிறர் பொருளை வஞ்சித்துப் பறிப்பதிலும், நினைவைச் செலுத்தி, சதா கெட்ட சிந்தனைகளையே மூளை ஆலோசித்துக் கொண்டேயிருக்கிறது.

நீ வெளித்தோற்றத்தில் சீலம் நிறைந்தவனுகவும், சிறப்புடையவனுகவும் காணப்படலாம். அதெல்லாம் வெறும் வெளிமயக்கு. கடவுள் அருளிய மேன்மையுமல்ல; உன் ஆன்மீக பிரகாசமும் அல்ல. வெளித்தோற்றத்தில், மிகப் பகட்டாக நான் காண்பது, எனக்கு உன் உள் ஒளி மறைவதையும், ஆத்மாவின் அழிவையும் காட்டுகிறது.

[3]

உலகையே ஆட்சி செலுத்தும் நமது மாபெரும் தலைவர்களும், பண்டைக்காலத்து பிரசித்தமான அரசர்களைப்போல நடந்து கொண்டு, பல்லாயிரக் கணக்கான பாமரமனிதர்களால் பாராட்டப்பட்டுப் பெருமையுடன் விளங்குவோரும், எவ்வகையில் பார்த்தாலும் அவர்களெல்லாம் ஆண்டவன் கண் களுக்கு மிக மிக எளியவர்களே. அப்பேர்ப்பட்ட வர்களின் பெருமை, சலவைத் தொழிலாளி, மயிர் வினைஞன், தையற்காரன் ஆகிய மூவரால் ஆக்கப் பட்டதே. அவர்கள், நம் வீட்டினுள் பாத்திரத்துத் தண்ணீரில் மிதக்கும் வெறும் பொம்மைப் படகுகள் தான். அவைகள் உண்மையாகவே கப்பலில் ஏற்றப்படும் சரக்குகளின் அழுத்தத்தையோ, அப்பாலுள்ளமகா சமுத்திரத்தின் தன்மையையோ ஒருபோதும் அறியாது.

[4]

ஹே! பாழ்பட்ட, நாசம் நிறைந்த நகர வாழ்வே! இறைவன், வாழ்க்கையாகிய நந்த வனத்தில், மனிதனை அழகிய ஒரு ரோஜாச் செடியாகவே நட்டுப் பயிரிட்டிருக்கிறார். ஆனால் அது துளிர்த்துவரும் அடுத்த கணத்திலேயே அதை சமுதாயம் மற்றொன்றாக மாற்றிவிட்டது.

IX

[1]

சூழ்நிலே, கம்பீரமான நல்லதொரு வளர்ச்சியை அடிக்கடி தடை செய்கிறது. மிக அருமையான மலரை, களேகள் மண்டி வளர்ந்து அமுக்கி விடுகின்றன. உன்னதமான மனித வாழ்க்கை, நாகரிகம் என்னும் சேற்றில் சிக்கிக் கொண்டு, தன் ஜீவனே இழந்து விட்டது. மனிதன் மீள முயற்சிக்கிருன்—ஆனுல், அந்த முயற்சிகளெல்லாம், ஒரு பெரும் பிழையிலிருந்து மற்ருெரு பெரும் குற்றத்திற்கு அவன் ஆளாவதாகவே தோன்றுகிறது.

வேகம் மிகுந்த வாழ்க்கை என்னும் ஆறு, மரணப்பொறியாகிய சுண்ணும்பு, செங்கல் இவைகளால் கட்டப்பட்டுள்ள வலிமையான அணேயினுல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில், அறநெறிகள் என்னும் வாய்க்கால்கள் காலத்திற்கேற்றவாறு திட்டமிடப்படாமலும், வெட்டி விடப்படாமலும் சீர்ப்படுத்தவேண்டிய நிலேயில் இருக்கின்றன. இந்த வாய்க்கால்களின் நீர் பாய வேண்டிய வயல்கள் கூட, ஏராளமாக களேகள் மண்டி வளர்ந்து வெறும் தரிசு நிலங்களாகவே கிடக்கின்றன.

[2]

மனித வாழ்வின் இன்பத்திற்கும் எளிமைக்கும், பட்டணத்து நாகரிக வாழ்வு பெரும் இடையூருகத்தான் இருக்கிறது. மலையுச்சியிலுள்ள புனிதமான வாழ்க்கையாகிய கோயிலுக்கு வளைந்து வளைந்து செல்லும் பாதையின் நடுவில் உள்ளதோர் பெரும் பிளவுபட்ட பள்ளமாகத்தான் அந்த நகரவாழ்க்கை அமைந்திருக்கிறது. மாட மாளிகைகள் சூழ்ந்த, சந்தடி நிறைந்த, நெருக்கடியான நகரவாழ்க்கையை விட்டுவிட்டு, சாந்தியும் அழகும் நிறைந்த விசாலமான வானவெளியும், பொற்குவியலைப்போலக் குவிந்துகிடக்கும் நெற்குவியல்களும், வைக்கோல் போர்களின் மணமும், புன்னகை தவழும் இயற்கை அழகு ஒளி வீசும் வயல் வெளிகளையும் நாடிச்சென்று, என்று நாம் இன்புறுவோம்?

அழகான மைதானங்களையெல்லாம் விகாரமான சின்னஞ்சிறு குறுகிய சந்துகளாகத்தடுத்துக் கட்டிடம் கட்டும் உங்கள் நகரத்து வெறுக்கத்தக்க கட்டிட வேலை முறையையும் சிற்ப முறையையும் விட்டு விடுங்கள். இவ்வாறு கட்டிடங்களை நிர்மாணிக்கும் நிபுணர்களான உங்கள் தச்சர்களையும் கொல்லர்களையும், கொத்தர்களையும் நாட்டை விட்டு

வெளியேற்றுங்கள். இனிமேல் என்னிடம் உங்கள் நகரவாழ்க்கை முறையையும் குடித்தனப் பாங்கையும் பற்றிய நீண்ட பிரசங்கத்தை நிறுத்தி விடுங்கள். உங்கள் சின்னஞ் சிறுவீடுகளை சற்றும் பொருந்தாத அழகிய ஆடம்பரமான பெயர்களைக் கொண்டு அழைப்பதை விட்டு விடுங்கள். அவை உங்கள் சிறை அறைகளேயன்றி, இன்பந்தரும் இனிய வீடுகள் ஆகாது. நீங்களேதான் அவ்வாறு செய்துகொண்டிருக்கிறீர்கள்; இவைகட்கெல்லாம் காரணம் உங்களுடைய பேராசை, கர்வம், ஆடம்பரம், பொய்மை ஆகிய கெட்ட குணங்கள்தான்.

X

[1]

நவீன நாகரிக மனிதனையும், அவனுடைய நகரவாழ்க்கையின் மேலுள்ள மோகத்தையும் நான் ஏன் பொருட்படுத்தவேண்டும்? மலர்களில் அழகு ராணியாக விளங்கும் தாமரை மலர், சேற்றிலே மலர்ந்து அந்தப் பாழும் குட்டையிலேயே தன் அழகையெல்லாம் வீணே இழந்து விடுகிறது. இறைவனின் விருப்பம், கடவுளின் செயல், நம் அறிவுக்கு எட்டாதது. மேலும், தத்துவ சாஸ்திரிகளின் நீண்ட விவாதத்திற்குரிய விஷயங்களில் நான் புகுந்து, ஆராய விரும்பவில்லை.

மனிதன் தன் பொன்னுன காலத்தைச் செலவிட்டு மிக்க உற்சாகத்துடன் செய்து முடித்துள்ள மேன்மை மிகுந்த தொழிலின் ஞாபகார்த்தமாக உள்ள புனிதமான கடற்கரையில் எனக்காக உள்ள இந்த ஒரு மணற்திட்டு இருக்கும் வரையில் எனக்கு என்ன கவலே?

[2]

தரையில் புரளும் அலங்கார ஆடைகளே அணிந்து உலவியும், நாவினுல் பொய்மையான பேச்சுக்களேப் பேசியும், நகரவாழ்வு வாழும் அந்த நாகரிக மனிதனுடன், பொதுவாக உள்ளும் புறமும் மெலிந்தும் நலிந்தும் கனவு கண்டு ஏங்கும் எனக்கு என்ன சம்பந்தமிருக்கிறது? அவர் களுடைய சந்தையில் நான் ஏதும் கொள்வதும் இல்லே; கொடுப்பதும் இல்லே. அவர்களுடைய கர்வமும், கம்பீரமும், கோலாகலம் பொருந்திய செயல்களும், இவையாவும் எனக்குப் பெருத்த அவமானமாகவும், கொடியபாவமாகவுமேதோன்று கின்றன.

[3]

நான் இப்பொழுது இருக்கும் இம் மணற் திட்டுக்களிலேயே மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக் கிறேன். என் சம்பந்தமற்ற வேறு ஏதோ காரியங்

களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே, நான் இந்தக் காவேரியாற்றின் கரையில், தனிமையாக, கட்டுப் பாடு ஏதுமின்றிச் சுதந்திரமாக, துணை ஒருவரு மின்றி, சாந்திமயமான ஆனந்தத்தை இங்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

காவிரியாறு கடலுடன் கலந்து களிக்கட்டும்; தே மலரை அடைந்து தேனீ இன்புறட்டும்; என்னைத் தவிர, மற்ற ஒவ்வொரு உயிரும் அவற்றின் பூரணமான மனத்திருப்தியை மற்றொன் றிலேயே கண்டு களிக்கட்டும்.

[4]

கரை புரண்டோடும் அதன் நீரில் பொற்து களும் கலந்திருப்பதால் காவேரி எல்லோராலும் போற்றத்தக்கதாய் புகழுடன் என்றும் விளங் கட்டும். அவள் செய்யும் தியாகத்திற்கு இணை யாக நான் என்ன செய்கிறேன்? அந்த வெறும் உப்புக் கடலுக்குத்தான் அவள் எப்பேர்ப்பட்ட அன்பு நிறைந்த தியாகத்தைச் செய்கிறாள்! புரண்டு வரும் கடல் அலைகள், அவளைக் கட்டி அணைத்து, விழுங்குவதற்கு ஈடாக, அவள் மிகுந்த பணிவுடனும், அன்புடனும் தன் நாயகனின் காலடியில்—கடலில்—தான் கொண்டுவந்த அத்தனை பொன்னையும் காணிக்கையாகக் கொடுத்து

விடுகிருள்.

என்னைத் தனியே விட்டு விட்டு, நான் பிறந்த ஊரில், காவேரி கடலுடன் கலந்து மனச்சாந்தியை அடைகிருள். அந்தப் புண்ணியம் நிறைந்த பொன்னிநதியின் நீரை நான் பருகிப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அவளுடைய வெற்றிப் பெருமிதத்திலே என் துன்பத்தின் கொடுமைகளை யெல்லாம் நான் முற்றிலும் மறந்தே விடுகின்றேன். அதன் தீஞ்சுவைத் தண்ணீரைப் பருகிக் குதூ கலித்துக் கதிரவன் ஒளியில் கூத்தாடுகிறேன். ஆற்றின் அழகிய நீர்ப்பரப்பில், பொற்துகளைச் சுமந்து வரும் நீரின் சுழல்களைக் கண்டு அதிசயிக் கிறேன். இளமான் மீது குறிபார்த்திருக்கும் கொடிய புலியின் குரூரமான பார்வையோடு, அருகி லுள்ளோர் ஒருவரை ஒருவர் உறுத்துப் பார்க்கும் வஞ்சக மாந்தர் நிறைந்த இந்த என்னைச் சூழ்ந் துள்ள உலகத்தையே—துன்பமயமான, கொடிய, கபடு நிறைந்த இந்த உலகத்தையே—நான் முற்றிலும் மறந்து விடுகிறேன்.

XI

[1]

கடலுக்கும் அதில் கலக்கும் காவேரியாற் றுக்கும் வேட்டகம் போல் விளங்கும் இந்த மணல்

திட்டுக்கள், கவிஞர்களுக்கு அவர்களுடைய சிந்தையில் தெய்வீகக் கவிதைகள் தோன்றி விளையாட ஏற்றதோர் அழகிய ஆசிரமம் ஆகும். உலக வாழ்க்கையைக் காட்டுவதுபோல, கடலுக்கும் கரைக்கும் அலைந்து ஓயாது பெருகி ஓடி வருவதும், பின்பு வழிந்தோடுவதுமாக அலைகள் இருக்கின்றன. கடலிலிருந்து நட்சத்திரமண்டலத்திற்கும் நட்சத்திர மண்டலத்திலிருந்து கடலுக்கும் இடையேயுள்ள களங்கமற்ற இந்த ஆகாயத்தின் அதிசயமான செய்தியை, மெதுவாக வீசும் உப்பங் காற்று நமக்குச் சொல்லுகிறது.

[2]

நகரங்களின் ஜனசந்தடிக்கும், குப்பை கூளங்களுக்கும், அதன் புழுதி மண்டியுள்ள சீர்கெட்ட பாதைகளுக்கும், வெகு தொலைவில் உள்ள இந்த மணல்' திட்டுக்களில், வாழ்க்கை யாகிய வாத்தியத்தில் சற்றும் தாள லயம் தவருது இயற்கைத் தேவி இன்பகீதம் பாடுகிருள். இன்பமும் துன்பமும் தங்கள் இயல்பை இழந்து, இரண்டறக் கலந்து, இனிய இசையாக மாறி, ஒன்ருகி விடுகிறது. மென்மையாக ஒலிக்கும் துன்ப வாழ்க்கையாகிய கீதம், மெதுவாகத் துயர நெருப்பில் உருவாகிறது.

[3]

எனக்கு இந்த மோன நிலே, பூமண்டலம், விண்ணுலகம், நட்சத்திர மண்டலம் இவைகளிலிருந்து எழும் சிருஷ்டி சக்தி வாய்ந்த தோர் இனிய செய்தி காதில் ஒலிக்கிறது. வசனமும் கவிதையும், இனிப்பும் கசப்பும், எல்லாம் கலந்து ஒரே இன்ப வெள்ளமாகப் பாய்கிறது, இந்த மோன நிலேயில் எனக்கு. சிருஷ்டிதத்துவத்தின் ஆதாரமான உயிர்நிலேயே மௌனம்தான்! உண்மையான ஆனந்தத்தின் அன்புமயமான அன்னேயும் அந்த மௌனமே! ஆழமாக, அசைவின்றி, அமைதி நிறைந்து காணப்படுகின்றதே அந்த நடுக்கடலேத்தான் நாம் சமுத்திரம் என்று சொல்லுகிரேம்; கடற்கரையில் வந்து மோதிப் பாய்ந்து இதோ விளேயாடும் இந்தச் சிற்றலேகள் ஆழ்கடல் ஆகுமா?

XII

[1]

கடவுள் சிருஷ்டித்துள்ள முறையில் மனிதனின் நிலேமையை நாம் ஆராய்ந்து பார்த்தால், இந்தப் பூமண்டலத்திலேயே மனிதன்தான் மிக உன்னதமான படைப்பு. உலகத்து உயிர்களில் அவனே மேன்மையானவன். ஏனேய பாண்டங்

களைப் படைக்கும் ஆக்க சக்தி வாய்ந்த குயவனின் சக்கரத்திற்கு உண்மையிலேயே அவனை உவமையாகக் கூறலாம். பூவுலகமாகிய பூஞ்சோலையில், பழத்தோட்டத்தில், பல்லாண்டுகள் பட்டபாட்டின் பலன் என்று கருதக் கூடிய, முதிர்ந்து பழுத்த கனியென மனிதனைக் கூறலாம். கண்ணுக்குப் புலனாகாத அமீபா கிருமி முதல், மேன்மையோடு விளங்கும் மனிதன் வரை-என்ன அபூர்வமான படைப்புத்திறன் காணப்படுகிறது! உயர்ந்த லட்சியத்தைக் கொண்டதோர் உன்னதமான முயற்சி. ஒரு சிறு இரும்புத் துண்டினாலான விளையாட்டுப் பொம்மைக்கோ, பொன்னாலான பொம்மைக்கோ, இந்த உத்தமமான குணநலன்களையெல்லாம் மனிதன் இழந்து விடுவானா? கடவுள், தன்னை ஆக்கிய வண்ணமே மனிதன் எவ்வித மாறுதலுமின்றிப் பாதுகாப்புடன்வைத்துக் கொண்டிருந்தால்—அல்லது, அகம்பாவத்திற்கு ஆளாகித் தன்னையே சர்வ வல்லமை பொருந்திய ஆண்டவனாகவே எண்ணிக் கொள்ளாதிருந்தால்-அல்லது, கர்வம், சுயநலம் ஆகிய தீய சக்திகளுக்கு இரையாகித் தன்னைத்தானே விகாரமாக அவன் ஆக்கிக் கொள்ளாமலிருந்தால்—நிச்சயமாக மனிதன் தன்மேன்மையை இழந்து விடவே மாட்

டான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

[2]

கடலிலிருந்து இதோ ஒரு புதிய இளங்காற்று என்மீது வீசுகிறது. மென்மையான இந்த மணல் வெளியாகிய மஞ்சம், தெய்வங்களின் மகிமை மிகுந்த பீடம்போல் காணப்படுகிறது. ஒரு புதிய இன்னிசையுடன் புனிதமான காவிரியாற்றின் நீரோட்டம் இனிமையாக ஒலிக்கிறது. எப்பொழுதையும்விட, இப்பொழுது மிகுந்த பிரகாசத்துடன் வானில் விண்மீன்கள் மின்னுகின்றன. புதியதோர் ஆனந்தத்தை எண்ணியதும் என் இதயத்தில் இன்ப அலைகள் எழுந்து மோதுகின்றன.

[3]

மனிதனே, விழித்தெழு! கிடைத்தற்கரியதோர் மிகச் சிறந்த சந்தர்ப்பம் உன் அருகில் இதோ உனக்காகக் காத்திருக்கிறது. சிலர் சோம்பிக் கிடந்து மகிழ்வதற்காக, பல்லாயிரக்கணக்கானவர் அரும்பாடுபட வேண்டியிருக்கிற முறையிலுள்ள சிக்கலான, கஷ்டம் நிறைந்த வாழ்வில் கிடந்து உழலாதே. உன் வாய்வார்த்தையாலேயே முறுக்கப்பட்ட கயிற்றினலேயே உன் ஆன்மீக வாழ்வை நீ கட்டுப்படுத்திக் கொள்ளாதே. உன்னை அழிக்கும் கோடரிக்கு நீயே நல்ல கம்பு தேடி

எடுத்து காம்பு போட்டு தயார்ப்படுத்தி வைக்காதே. நீயே உனக்குக் கொடுத்துக்கொண்ட வெகுமதிப் பொருள்களுடன், உன் இயல்பான உன்னத குண நலன்களேயும் அழிந்து ஒழிந்து விடச் செய்யாதே.

XIII

[1]

வாழ்க்கை என்பது அதன் கஷ்ட நிஷ்டூரங்களேத் தவிர வேறு அதில் ஒன்று மில்லே. கடற் பிரயாணத்தின்—கப்பல் போக்கு வரத்தின் வெற்றியே கடற்கரைப்பகுதிகளில் வாழும் மக்களின் வேற்றியே யாகும். விளக்கு, விளக்கப் படம், மேலும் திசை காட்டும் கருவி ஆகிய எவ்வித சாதனமும் இன்றி, உயர்ந்த காரியத்தின் சாதானேயையே குறிக்கோளாகக் கொண்டு, ஆழ்ந்த நம்பிக்கையுடனும், தீரத்துடனும், அடிக்கடி, பலவீனமான வெறும் கட்டுமரத்தில் ஏறிக்கொண்டு, மிகவும் தூரத்திலுள்ள நாடுகளேயும் நாம் அடைந்திருக்கிறோம்.

[2]

எல்லோரும் நிறைந்துள்ள புதிய உலகத்தை, எல்லோருக்காகவும் சிருஷ்டித்து, அன்பு, பயபக்தி, இவைகளின் மூலம் தன்னேச் சூழ்ந்துள்ள சந்தே

கங்கள், துன்பங்கள் இவற்றை யெல்லாம் கடந்து வெற்றிகொண்டு உறுதியுடன் நிலையாக வாழ்வ வதைப் பொறுத்துத்தான் மனிதனின் அழியாப்புகழ் விளங்குகிறது. மனிதகுலத்தின் நலனை முன்னிட்டு தன்னலப்பற்றின்றி, தீர்க்க தரிசனத்துடனும், நம்பிக்கையுடனும் பாடுபடுபவனுக்குத்தான் அழகு, ஆனந்தம், அமைதி, இன்பம் ஆகியவையெல்லாம் காத்திருக்கின்றது.

[3]

சூழ்ந்துள்ள பல சகாப்தங்களைக் கடந்து செல்ல, இணையற்ற, மேன்மையான கடற் பிரயாணம் செய்ய, புயலையும், பெரு மழையையும் தீரத்துடன் சமாளித்துக்கொண்டு முன்னேற, இந்த மனித வாழ்வாகிய கட்டுமரத்திற்கு, மெலிந்த உடலாகிய இந்த மரக்கலத்திற்கு, அது ஏற்றிச் செல்லும் அன்பு, அறிவு, என்ற ஒப்பற்ற செல்வங் களே பெரும் பாரமாகவும் அரும் துணையாகவும் விளங்குகின்றன. புதிய, பரிசுத்தமான காலதே வனின் சுவாசமாகிற காற்றைக் கொண்டு, கட்டு மரம் தன் கடற்பிரயாணத்தை நடத்த, அதன் பாய்மரங்கள், தன் பாய்களை அகல விரித்து எப்பொழுதும் தயாராகக் காத்துக் கொண்டிருக் கட்டும். அழிவற்ற, பேரழகு பொருந்திய,

கற்பனைக்கும் எட்டாத, அற்புத உலகத்திற்கு மரக் கலத்தை அவை கொண்டு செல்லட்டும். கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்தின் பிரகாசமான தீபமும், விண்ணில் ஒளியுடன் திகழும் சோதிச்சுடரும், சாந்தமும் அமைதியும் நிறைந்துள்ள அடுத்த இடத்திற்குச் செல்ல இந்தக் கப்பலுக்கு வழிகாட்டியாக விளங்கட்டும்.

XIV

[1]

கடற்காற்று மெதுவாக வீசுகிறது. வானத்தில் நட்சத்திரங்கள் மௌனமாக ஒளி மிகுந்த கண்களுடன் பார்க்கின்றன. சவாரி செய்வது போல, ஒன்றின் மீது மற்றொன்று பாய்ந்து செல்லும் அலைகளின் முடியிலும், 'அமைதி' அமர்ந்திருக்கிறது. தான் வந்து சங்கமம் ஆகவிருக்கும் அருகிலுள்ள கடலின் அளவுகடந்த உத்ஸாகத்தைக் கண்டு காவேரி அதிசயத்துப் புன்சிரிப்புடன் சுழித்துச் சுழித்து ஓடோடி வருகிருள்.

ஒரு புரட்சி—ஒரு மாறுதலுக்கு முன்பு இருக்க வேண்டியதான ஆழ்ந்த சிந்தனையில் சிருஷ்டி கர்த்தா இருப்பது போலத் தோன்றுகிறது. மேலும், சற்றுத் தூரதிருஷ்டியுடன், சுகமாக நின்று ஆலோசித்துக் கொண்டிருப்பது போலக் காணப்

படுகிறது.

ஏனென்ருல், வெகுசீக்கிரத்தில் மழைபொழியும் பருவக்காற்று குன்றுகள்மீதும், பள்ளத்தாக்குகளிலும், நீரிலும், நிலத்திலும், எங்கெங்கும் வீசி, உள்ளத்தைக் குளிர்வித்துப் பூரிக்கச் செய்யப்போகிறது. எங்கும் பெய்யவிருக்கும் அந்த ஆனந்தமான பெருமழைப் பொழிவினுல் எவ்வுயிரும் உள்ளக்களிப்புற்று, புத்துயிரே பெற்றுவிட்டது போல், வாழ்விலே ஒரு புதுமையைக்கண்டு, அளவற்ற இன்பமடையப் போகிறது.

[2]

கீழ்திசை நாடுகளும் மேற்கத்தியநாடுகளும் மிகக்கொடிய வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆம்! மற்ருெரு புதுமைப் பிறவியைப் பெறும் பொருட்டு அனுபவிக்கும் பிரசவ வேதனை என்றுகூட அதனைக்குறிப்பிடலாம்.

தென்திசையிலிருந்து வீசும் மென்மையான இளங்காற்று, என் உன்னத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் மிகத்தூய்மையான, இன்பம் நிறைந்த புதிய வாழ்வின் சிந்தனைகளை, மூலிகைகள் பலநிறைந்த வனத்தின் நறுமணத்துடன் வீசி, விழித்தெழச் செய்கிறது.

மிகத்தொலைவில் உள்ள விரிந்த அட்லாண்

டிக் மகாசமுத்திரத்திலிருந்து வீசும் வறண்ட மேல்காற்று, அங்கு அது கண்ட பரபரப்பான, சுறு சுறுப்பு நிறைந்த வெறும் ஆரவார வாழ்க்கையைப்பற்றி எனக்குச் சொல்லுகிறது.

நடுக்கும் குளிருடன் கூடிய அந்த வடதிசைக் காற்று, இமயமலைச் சிகரங்களிலிருந்து வீசி, பனிமலைச்சிகரங்களிலும், நதிகள் பாய்ந்தோடும் பள்ளத்தாக்குகளிலும், உறைபனி உருகி விரைந்தோடும் ஜீவநதிகள் பாயும் பிரதேசங்களிலும் ஆங்காங்கு அது கண்ட இயற்கை அனுபவம் மிகுந்த அந்த நாட்டிற்குரிய அபூர்வக் கதைகளைக் கொண்டுவந்து எனக்குச் சொல்கிறது.

கீழ்த்திசையிலிருந்து வீசும் இந்தப் புதிய காற்று, அழிவற்ற பரம்பொருளின் பரமரகசியமான அற்புதச் செய்தியை என் காதில் முணு முணுக்கிறது.

[3]

இவைகள் யாவும் நவயுகம் அமைவதற்கான, புனருத்தாரணத் திற்குரிய அற்புதக் கதைகள் அல்லவா? கடும் உழைப்பிலும், அன்பிலும் உருவாகி உயிர்த்துடிப்பு நிறைந்த உலகமக்கள் அனைவருக்குமே பொதுவான அகில உலகதர்மம்—உலகப்பொதுமதம்— புதியதொரு மார்க்கம் கண்டு

அதனைப்பின்பற்ற இது ஒரு சிறந்த சமயம் அல்லவா? மனித இனத்திற்கே ஏதோ ஒருபுதுமை காத்துக்கொண்டிருக்கிறது என்று நாம் எண்ணக் கூடாதா? ஏன்?—ஒரு புதுமை தோன்றவே, ஒரு நவயுகம் அமைப்பதற்கே மனிதவர்க்கம் காத்துக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லலாம், அல்லவா?

விழித்தெழுந்து, புத்துணர்ச்சி பெற்று, புது வாழ்வு பெறவேண்டும் என்ற முணு முணுப்பை நாம் இன்று எங்கும் கேட்கிறோம். மக்கள் உல குக்கே—மனிதகுலத்துக்கே, உலகமெங்கும் ஒரு ஒரு பெரியமாற்றம்—ஒரு மாபெரும் அகில உலகப் புரட்சி· ஏற்பட இருக்கிறது. கீழ்த்திசைநாகரிகம் ஆகிய பாவும், மேற்கத்திய நாகரிகமாகிய ஊடும் சேர்ந்துதான், வருங்காலத்து நல்வாழ்வு என்ற அற்புதமான ஆடையை நெய்தாக வேண்டும். அகில உலகத்திற்கும் அதுவே அழகு மிகுந்த தெய்வீக ஆடையாக அமையும்.

மகான்களும், அறிஞர்களும், உலகமக்களின் வாழ்க்கைப் போராட்டம் என்ற இந்தப்பாலை வனப் பிரயாணத்தில், உலகத்து ஜனங்களாகிய யாத்ரீகர்களை, இவ்வுலகமாகிய பாலைவனத்தில் தெளிந்த நீர்ஊற்று மறைந்து கிடக்கும் இடம்,

சற்று வசதியாக இளைப்பாற ,நிழல்தரும் பேரீந்து மரங்கள் உள்ள இடம், முதலான உலகின் நுட்பங்களை நன்குணர்ந்து நமக்கு எடுத்துரைத்து, நல்வழிகாட்டுவார்களாக!

[4]

இத்தகைய என் ஆவல் நிறைந்த அபூர்வமான பகற்கனவுகள் எல்லாம் உண்மையிலேயே பலிக்கும் என்பதற்கு சுப சூசகமாக, இதனை அங்கீகரித்து, ஒப்புக்கொள்வது போலத்தோன்றும்படியாக, நதியும் கடலும் ஒன்ருகிச் சங்கமம் ஆகும் போது அவைகள் தங்களின் அன்புகலந்த இனிய மொழியில் "ஓம்" என்று ஒலிப்பது காற்றில் தவழ்ந்து வந்து என் காதில் இனிக்கிறது. மேலும், நம்பிக்கை யூட்டக்கூடிய இந்த மங்களகரமான செய்தியை, இன்னிசை ஒலிக்கும், தங்க ஜரிகை மின்னும், வெண்நுரைகளுடன் கூடிய அலைகளை, ஆரவார மிகுந்த கடல், கரைக்கு அனுப்பி, அறிவிக்கின்றது.

XV

(1)

ஆனல், புத்துயிரூட்டும் நவயுகம் அமைப்பதற்கு அடிகோலும் இளங்காற்றையோ, இனிய காற்றையோ எண்ணி நான் ஏன் கவலைப்பட

வேண்டும்? ஆற்றுக்குப் புகல் அலைகடல் இருக்கிறது. அழகிய மலருக்குத்துணை தேனீ இருக்கிறது. ஆனால், எனக்குத்துணை நான்தான். வேறு யாரும் துணையில்லை. தன்னந்தனியே இந்த மணற்திட்டுக்களின் மீது உட்கார்ந்து கொண்டு ஒரு பொழுதும் என் சம்பந்தமில்லாதிருக்கிற விஷயங்களைப்பற்றி யெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகின்றேன்.

[2]

சற்றே முதிர்ந்து வளர்ந்துவிட்ட ஒரு குழந்தை நான். ஆகவே, இந்த மணற்திட்டுக்களின் மீது இன்பமாக ஒரு மணிநேரம் மெய் மறந்து விளையாடுவதிலிருந்து என்னை எதுவும் தடைசெய்ய இயலாது—ஏன்? உலகிலுள்ள பொன்னும், வெள்ளியும் அத்தனையும் எனக்குக் கிடைப்பதாக இருந்தாலும் நான் அவைகளைப் பொருட்படுத்தவே மாட்டேன். ஏதோ ஒரு அதிசயமான மந்திர சக்தியினால், ஒரே நாள் இரவில், உலகத்து மனிதர்கள் அனைவரும் தேவர்களாக மாறிவிட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். என் அளவில் இந்த அதிசய மாறுதல் என்னை என்ன செய்யும்? ஏதுமில்லை. என் எண்ணமெல்லாம் என் விளையாட்டுக்குரிய பொருள்களான

இந்தக் கடற்கரையில் காணப்படும் அதிகமான கிளிஞ்சல்களையும், கூழாங்கற்களையும் பற்றியே நிற்கும்.

[3]

உருண்டோடிவரும் இந்த ஆற்றை, சற்றும் இமைகொட்டாமல், விழித்தகண் விழித்தபடியே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்க நான் மிகவும் ஆசைப்படுகிறேன். சில சமயங்களில் எண்ணிக் கைவைத்துக் கொண்டும், சில சமயங்களில் எண் ணிக்கைவைத்துக் கொள்ளாமலும், புன்முறுவல் பூத்துக்கொண்டு, சுழித்துச் சுழித்து ஓடிவரும் அழகிய ஆற்றில் கூழாங்கற்களைப் பொறுக்கி வைத்துக்கொண்டு எறிந்து விளையாடுவது எனக்கு ஒரு இன்பமான பொழுதுபோக்கு. என் இளமைப் பருவமாகிய சொரிமணற் கடிகாரத்தில் என்றும் மணல் குறைவதே இல்லை. ஏனெனில், என்கை யிலுள்ள கூழாங்கற்கள் தானுகட்டும் அல்லது கடலிலுள்ள கூழாங்கற்கள்தானுகட்டும், எல்லா வற்றையும் நான் ஆற்றினுள் எறிந்து என் விளை யாட்டு முடிந்து விட்டதா?

XVI

Part III [1]

ஆ! என் குழந்தைப் பிராயத்தின் இன்பம்

நிறைந்த நாட்களை இப்பொழுது எண்ணிப்பார்த்தாலும் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது! எனக்கே முற்றிலும் சொந்தமான ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் பிறந்தேன். ஆற்றங்கரையில் பனியினால் வளரும் குசம் என்னும் புல், தன் காலடியில் வெள்ளமாக ஓடிவரும் ஆற்றுநீரையும் அலட்சியம் செய்து செழித்து நிற்பதைப் போலவே, நானும் நாள்தோறும் ஊக்கமுடனும் உற்சாகத்துடனும் வளர்ந்து வந்தேன்.

என்னைச்சுற்றிலும் எப்பொழுதும் ஒருகூட்டம், சின்னஞ்சிறுவர்களும், சிறுமிகளும் இருப்பார்கள். அவர்களில் ஏழை, பணக்காரர்; உயர்ந்தவர், தாழ்ந்தவர்; அழகுடையவர்கள், அழகில்லாதவர்கள்; தீரமுடையவர்கள், கோழைகள் இப்படியாக பலவகைப் பட்டவர்களும் இருப்பார்கள். இந்த என் பட்டாளத்தை புழு, பூச்சி உலகத்தையே எதிர்த்துப் போராடி வெற்றி சூடிவருமாறு அவர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பேன்.

[2]

எங்கள் ஊரின் எல்லையில் வளைந்தோடிவரும் ஆற்றினுடன் நானும் அதன் கரையில் வெகுதூரம் ஓடிச்செல்வேன். மரங்களுக்கிடையிலும், புதர்களுக்

கிடையிலும் புகுந்து சென்று என் வயல்களுக்கெல் லாம் பொறுமையுடன் மெதுவாக நீர் பாய்ச்சுகிற அந்தச் சின்னஞ்சிறு வாய்க் கால்களினிடத்தில் நான் அன்பு ததும்பும் குரலில் இனிமையாகப் பேசு வேன். என் அன்பான வார்த்தைகளை அவைகள் அலட்சியம் செய்வதுபோல எனக்குத்தோன்றினுல் அல்லது நான் கட்டளை இடுவதுபோல அவை பாய்ந்து செல்லவில்லை என்ருல், என் வார்த் தைகளை மதிக்காத அந்தக் கீழ்ப்படியாத வாய்க்கால் நீரை நிறுத்தி, செடிகளையும் களிமண்ணையும் சேர்த்துவைத்து அடைத்து, அவைகளை ஒரு மணி நேரம் ஓட விடாது தண்டித்து விடுவேன். என் குழந்தை உள்ளத்திற்கு இப்படி அவைகளை வருத்துவதில் ஒருவகை மகிழ்ச்சி. பிறகு, சற்று நேரத்திற்கெல்லாம் வாய்க்கால் தண்ணீராகிய கைதிக்கு விடுதலை அளித்து விடுவேன். அது ஒலித்துக்கொண்டே மகிழ்ச்சியுடன் பாய்ந்தோடு வதைப் பார்த்துக் களிப்பேன்.

[3]

அவ்வளவு நேரமும் என்கையில் அகப்படாது, என்னைத் திரிந்து அலையச் செய்த அந்த வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்ததும், அவைகளை என் விரல்களினிடையே சிறைப்பிடித்திருப்பேன்.

ஆனால், அந்த அற்ப ஜீவன்கள் என்னுடன் இதமாக தங்கள் வாழ்வுக்காகப் போராடுவது என் உள்ளத்தை நெகிழச் செய்து, அவைகளிடம் இரக்கம் காட்டச் செய்து விடும். அப்பொழுது நான் அவைகளை சுதந்திரமாக மலர்தோறும் பறந்து திரிந்து செல்லும்படியாக விட்டுவிடுவேன். மலரிலிருந்து தேனைக் கொள்ளை கொள்ளும் தேனீயைப் போல, அவைகளுக்கு தேனைக் குடிக்கும் முறை தெரியாவிட்டால் என்ன குறை?

[4]

நான் விரைந்தோடும்போது என் காலில் தைக்கும் முட்களைப் பற்றிச் சிறிதும் நான் எண்ணுவதேயில்லை. வயிற்றுக்கு உணவையோ, தின்பண்டங்களையோ பற்றிநினைத்துப் பார்ப்பதுமில்லை. ஆனால், கவலை ஏதுமின்றி, ஏதோ ஒரு சிறு தேவதை வழிதவறி இந்த மண்ணுலகில் வந்து விட்டதுபோல, அங்குமிங்கும் களிப்புடன் திரிந்து கொண்டே இருப்பேன்.

[5]

இவைகளை யெல்லாம கண்டால், என் தகப்பனுருக்கு என் மீது மிகுந்த கோபம் உண்டாகும். என் ஒரு கொஞ்சும் மொழியாலும், ஒரு முறை வாய்திறந்து 'கலகலென' சிரிப்பதனுலும்,

என் தந்தையாரின் கோபத்தை நான் தணித்து விடுவேன். என் தாயாரின் அன்பு என்னை ஒரு துஷ்டப்பயலாக ஆக்கிவிட்டது. ஏனென்றால், என் பெற்றோர்களுக்குபலபெண் குழந்தைகளினிடையே நான் ஒருவன்தான், அபூர்வமாக, ஒரு ஆண் குழந்தை! என் பாட்டியார் எனக்குக் கொடுத்த அளவுக்குமீறிய செல்லம் என்னை வீட்டில் ஒரு முரட்டுப்பயலாக ஆக்கிவிட்டது. வெறும் வேடிக் கைக்காகவாவது வீட்டிலிருந்தஅழகிய சிறு பெண் குழந்தைகளின் கன்னங்களைப் பிடித்துக் கிள்ளி விடுவேன். ஆனால், அவர்கள் மிகவும் அழத் தொடங்கிவிட்டாலோ, அவர்கள் கண்களைத் துடைத்துவிட்டு, அவர்களை முத்தமிட்டுக் கொஞ்சி சமாதானப்படுத்துவேன். அடுத்த விளையாட்டு ஆரம்பிக்கிற வரை ஒரு அரை மணி நேரத்திற்கு இவ்விதம் நடைபெறும்.

[6]

நான் கன்றுக்குட்டிகளைப் பிடித்து விளையாடுவேன். மணலில் கோட்டைகள் கட்டி விளையாடுவேன். ஓடும் வண்டிகளைப் பிடித்துக் கொண்டே நானும் ஓடிச்சென்று, தவறிவிழுந்து கத்துவேன். எவரும் அறியாதவாறு மெதுவாய்ச் சென்று சமையலறையிலிருந்து உணவை எடுத்துப் போய்

எங்கள் கிராமத்தில் காணப்படும் நாய்க்குட்டிகளுக்கு உணவூட்டுவேன். பின்னர், அவைகள் எனக்கு நன்றி தெரிவித்துக்கத்தும் வரை, அவற்றின் காதுகளைப் பிடித்துக் கிள்ளுவேன். அவைகளின் அலறலைக்கண்டு, கைகொட்டிச் சிரிப்பேன். சுவர்க்கவாழ்வு என்று சொல்லும்படியான அவ்வளவு பூரண சுதந்திரமான என் வாழ்வில், நான் மிகுந்த பிரியமுள்ள செல்லக் குழந்தையாக இருந்ததால், என்னையே நான் மறந்திருந்தேன்.

[7]

ஆனல், ஆண்டவனே, என் அத்தகைய ஆனந்த மயமான இன்ப உலகம் என்னிடமிருந்து எங்கே மறைந்து சென்று விட்டது? ஏன் மறைந்து போயிற்று? என்றும் மறக்க முடியாத, அழிவற்ற, என் இளம் பிராயத்து தெய்வீகம் பொருந்திய இணையற்ற நாட்களே! அந்த மாறுபடாத இனிமை நிறைந்த குழந்தைப் பிராயத்து நாட்களை விட்டுப் பிரிந்து, இதோ! எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கிற இந்த மணற்திட்டுக் களையல்லவா, நான் பெற்றிருக்கிறேன்.

XVII

[1]

என் இளமைப் பருவம் அதன் ஆரம்பத்தி

லிருந்தே இனிமையாக இருந்ததுபோலவே, அதனைத் தொடர்ந்தே, நான் வளர்ந்து ஆளான பிறகும், அரும்பு விரிந்து மலராகி மணம் பரப்புவதுபோல என் வாழ்வு ஆனந்தமாக மலர்ந்தது! உண்மையிலேயே, என் பள்ளிப் பிராயத்தில் சிறைச் சுவர்கள் என்னைச் சுற்றிலும் சூழ்ந்திருந்தன. பள்ளிக்கூடம் எனக்கு அவ்வாறு எப்பொழுதும் இருந்தது.

தென்னந்தோப்பில், பசுமைதவழும் தென்னங்கீற்றுக்களின் மீது அமர்ந்து, அழகுடன் விளங்கும் பச்சைக் கிளியை, வானவீதியில் ஆனந்தமாகப் பறந்து திரிந்துகொண்டும், கட்டுப்பாடின்றி பூரண சுதந்திரமாக உலவும் காற்றைப்போல இஷ்டம் போல அலைந்து கொண்டும் இருந்த பச்சைக் கிளியை ஒருநாள் பிடித்துக் கூட்டினுள் அடைத்து வைத்து, இவ்வுலகில் வாழ்வின் துன்பமயமான விதியின் கதையை விரித்துரைக்கச் செய்ததுபோல் இருந்தது.

[2]

பதினைந்து ஆண்டுகள் என் பள்ளிக்கூட அறைகளிலும், கல்லூரி மண்டபங்களிலும் நான் வாடி வதங்கினேன். அவைகளின் சுண்ணும்பு-சிமிந்தியின் வாடை என் மூக்கைத் துளைத்தது.

சற்று அதிகச் சதையுடன் வளர்ந்துவிட்ட என் சகமாணவர்களைக் கண்டு என் உள்ளம் ஏளனம் செய்யும். கல்லூரியில் போதித்த என் பேராசிரியர்கள் என் ஆன்ம வளர்ச்சியைக் கொன்றே தீர்த்தார்கள். என் பாடப் புத்தகங்கள் என் இளமையின் இனிமையைப் பிழிந்து எடுத்து விட்டன: விரிந்த வானத்தின் வனப்பு, பரந்த மைதானத்தின் அழகு ஆகிய இயற்கை இன்பங்களை அனுபவிக்கும் ஆற்றலை அழித்து விட்டன.

விசாலமான பரந்த மைதானம், நீர்ப்பரப்பில் சிறிய வட்டமாகத் தொடங்கி மேலும் மேலும் கரையை எட்டும் வரை விரிந்து செல்லும் அலைகளையுடைய தடாகங்கள், மனத்தைக் கொள்ளை கொள்ளும் கிராமாந்தரத்து விளையாட்டுகள், புதரில் பூத்துக் குலுங்கும் மலர்கள், பழங்களைச் சுமந்து நிற்கும் மரங்கள், இசைபாடும் பறவைகள் இவைகளையெல்லாம் கண்டு களிக்க நான் எண்ணியதெல்லாம் வீணாயிற்று. பள்ளிக்கூடத்துப் பெஞ்சுகளுடனும், கல்லூரி அறைக்கற் சுவர்களுடனும் என் கல்விப்பருவம் கழிந்தது. இவற்றினின்றும் மீள என்னால் இயலவில்லை.

பின்னர், பள்ளிக்கூடம் என்னும் இந்த இரும்புக்கூண்டிலிருந்து, அதனிலும் குறுகியதான

உலக வாழ்க்கை என்னும் சிறைக்குள் வந்து சேர்ந்தேன். இதுதான் எத்தகைய பயங்கரமான துயரம் நிறைந்த மாறுதல்!

[3]

இவைகளை யெல்லாம் பற்றி நான் சிந்தித்துப் பார்க்கும்பொழுதும், உலகில் வாழ்க்கையின் துன்பமயமான வரலாற்றை எண்ணிப் பார்க்கும்பொழுதும், அதன் பயன் வெறும் பாவம் சேருகிற காரியமாகவும் ஒரு பிரயோசனமும் இல்லாததாகவும் இருப்பதைத்தான் உணர்கிறேன். வீணனதோர் கண்மூடித்தனமான காரியம் என்றே தோன்றுகிறது; அதாவது இலை உதிர்காலத்துக் காற்றில் உலர்ந்த சருகுகள் மரத்திலிருந்து 'பொல, பொல' வென்று உதிர்ந்து பள்ளத்தாக்குகளில் விழுந்து கிடப்பதைப் போலத்தான்.

இத்தகைய ஆத்திரத்திலும் கோபத்திலும் என்னைச்சுற்றிலும் உள்ள மணலை அள்ளித்தூவுவேன். எதிரிலுள்ள காவேரியாற்றில் மிகுந்த வேகத்துடன் அருகில் கிடக்கும் கூழாங்கற்களை பொறுக்கி எறிவேன். ஆனல் சுழித்துச் சுழித்துச் சுழல்களுடன் பாய்ந்தோடும் அந்த ஆறு, என் இரங்கத்தக்க நிலையைக்கண்டு மோனப்புன்னகை புரிந்து செல்வதாகவே எனக்குத்தோன்றும்.

[4]

இவ்வாறு நான் சிந்தனை செய்து கொண்டே இருக்கும்போது, மேலும் தீவிரமான நிலையில், இம் மணல்திட்டுக்களின் மீதே நான் தவயோக நிலையை அடைந்துவிடுகிறேன். அப்பொழுது நான் வாழ்வின் குரூரங்களையும், கொடுமைகளையும், குழப்பங்களையும் மனிதரின் நிரந்தரமான பிரச்னைகளையும் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்கிறேன்.

இந்த மணல் வெளியின் அடியில், வெகுஆழத்தில் உள்ள "அன்பு, அறிவு, ஆனந்தம்" என்னும் மூன்று நீரோடைகளையும் ஆவலுடன் எதிர் நோக்கி, என்னைச் சுற்றிலுமுள்ள மணற்பரப்பின் மேல் என் சின்னஞ்சிறு விரல்களால் தோண்டிப் பார்க்கிறேன். தவிக்கும் ஆன்மாவின் தாகத்தைத் தணிக்கவும், என் மனப்பூர்வமான முயற்சிக்கு இணங்கவும், இந்த மணல் வெளியில் அடியில் மறைந்துள்ள நீர் ஊற்றுக்கள் மேலே பொங்கி எழுந்து வந்து பெருகட்டும்.

XVIII

Part IV [1]

ஏ! மேற்கத்திய நாடுகளே! இந்த ஓர் ஆயிரம் வருடங்களின் தலைமைப்பதவியை எவரிடம் தந்திருக்கிறீர்கள்? எங்களுக்காக நீங்கள் என்ன செய்

திருக்கிறீர்கள்? சூரியனின் அழகிய முகத்தையும், வானத்தின் அழகையும் பாழ்படுத்திவிடும் அளவுக்குத் தொழிற்சாலைப் புகையை விண்ணையெட்டும் உயரத்திற்கு அனுப்புவதற்குத்தான் கற்பித்திருக்கிருய். ஓர் ஆயிரம் மைல்கள் தூரத்திற்கு இருப்புப் பாதையை அமைத்திருக்கிருய்; மேலும், வானுலகில் வாழும் நம்மைப்படைத்த ஆண்டவனுக்கு நம்முடைய துன்பங்களை யெல்லாம் ஒலிபரப்புவன போல் ஆயிரக்கணக்கான கம்பங்களையும் நாட்டியிருக்கிறீர்கள். விண்ணைக் கிழித்துக் கொண்டு நிற்பனபோல் காணப்படும் அவைகள் தெய்வீகத்தைக் குறைப்பனவாக வன்ரே இருக்கின்றன.

[2]

தொழிற்சாலைகளின் புகையும், தொழிலாளர்களின் கடும் உழைப்பின் களைப்பும், ஆகியவைகளின் நிழல் இந்த அழகிய உலகத்தின் முகத்தின் மீது படர்ந்திருக்கிறது. ஆறுகள் பாயும் பள்ளத்தாக்கின் மீதும், மரங்கள் அடர்ந்து வளரும் காடுகளின் மீதும், புராதனமான பழம் பெரும் கிராமங்களின் மீதும், நெல் வயல்களின் மீதும், கோபுரம், கோயில், தேவாலயம், மசூதி ஆகிய புனிதமான இடங்களின் மீதும் இத்தொழிற்சாலைப் புகைகளின் நிழலும் படர்ந்துள்ளதை நாம் காண்கிரும். மனி

தனிலிருந்து மலர் வரை, மிக உயர்ந்தவையும், மிக அழகியவையும் ஆகிய பொருள்களை, சூரியனிடமிருந்து வரும் கதிரவன் ஒளியில் நோக்கினுல், எல்லாம் வீணுனவை களாகவே தோன்றுகின்றன.

[3]

வர்கனங்களாகிய ஸைக்கிள், மோட்டார், ரயில் இவைகளின் வேகம், இவைகளின் ஆதிக்கம் என்னை வருத்துகிறது. எங்கு பார்த்தாலும் பெட்ரோல் மூலம் இயங்கும் இயந்திரங்களின் வேகம் தான் காணமுடிகிறது. நாள் முழுதும் இருபத்திநாலுமணி நேரமும் ஓயாதவேலை; ஒரு கணமும் ஓய்வு என்பதே இல்லை. வாழ்க்கையின் நாடி நிதானமாக அமைதியாகத் துடித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, வாட்டி வதைக்கின்ற ஒருவகைப் பரபரப்பு, தொல்லை தரும் அவசரம் தான் எங்கும் காண்கிறேம். இவையாவும் இந்தச்சிறு கிரகமாகிய இம்மண்ணுலகில் மனிதரின் சக்தியையும் வளர்ச்சி வேகத்தையும் கெடுத்து விட்டது. எட்டி வேகமாக நடந்தது போக அதிவேகத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாக மாறி புகழை இழந்தோம்!

மைதானத்தின் குறுக்கே ஆற்றுக்குச் செல்லும் பாதையாகவுள்ள வளைந்து செல்லும் நடைபாதையை கடவுள் உண்டாக்கினுர். ஆனுல், மனி

தனே கண்ணுக்கு விகாரமாகவும், பாதத்தை வருத்துவதாகவும் உள்ள கற்கள் பதித்த சாலைகளை அமைத்தான். இந்தச்சாலைகள் எங்கும் கொண்டு சேர்ப்பதில்லை. களிமண் பாதைகளில் வரிசையாக நின்று குளிர்ந்த நிழல் தந்து கொண்டிருந்த அந்தப் பெரும் ஆலமரங்கள் எல்லாம் இப்பொழுது எங்கே மறைந்து விட்டனவோ? கூடுகட்டி இன்பமுடன் வாழ்வதற்கு வசதியாக இருந்த அந்த மாபெரும் ஆலமரங்களை இப்பொழுது இழந்து தவிக்கும் பறவைகளைத்தான் கேட்கவேண்டும்.

[4]

நம்முடைய வாழ்வுதான் எத்தகைய உயிர்த்துடிப்பு இல்லாத வெறும் ஆரவார மானதாக மாறி விட்டது! தன்வாழ்வுக்குத்தான் பாடுபட்டு உழைப்பது என்பது மாறி வேறு யாருடைய நல்வாழ்வுக்கோ உழைத்து மாய்வது என்று ஆகிவிட்டது. நாள்தோறும் உழைக்கின்ற புனிதமான உழைப்பு அதன் இயல்பு மாறி கொடுமை நிறைந்த, அன்பு, ஆதரவு இல்லாத வெறும் வீண் ஆகிவிட்டது. வெறும் உபயோகமற்ற முறையில் கால் வலி எடுக்க களைத்துப்போய், சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான் மனிதன். மனிதன்தான் உலகத்து உயிரினங்களின் வளர்ச்சியில் மிக உயர்ந்தவன். அவன்

தான் ஏற்படுத்திக் கொண்டவைகளுக்கே, தான் அடிமையாகி, வாடுகிருன். உனக்காக, உன் நன்மைக்கு உழைப்பதற்காக, நீ தோற்றுவித்த பூதம், உன்னேயே ஆட்டிவைக்கும், உன் எஜமானனுக அல்லவா, ஆகிவிட்டது! ஏன்? இவற்றிற்கெல்லாம் காரணம் உன் பேராசையே அன்றி வேறல்ல!

XIX

[1]

உலகத்தைக் குற்றம் சொல்ல, அது என்ன தவறு செய்திருக்கிறது? காது செவிடுபடும்படியான பேரிரைச்சல், பெருமுழக்கம்; மிகுந்த ஜன நெருக்கடி; வியர்வை ஊற்றெடுத்துப் பெருகும் உழைப்பாளர்களின் கூட்டம்; மிகக் குறைந்த செல்வவந்தர்கள்; எண்ணற்ற ஏழைகள்; உலோகத்தாலான நாணயங்களேப் பெருக்கிக் காட்டும் பாங்கிக் கணக்குப் புத்தகங்கள்; இவைகளால் தகுதியற்ற சிலருக்குப் பெருகும் சுகானுபவங்கள்; இவ்வாறு இவ்வுலக வாழ்வே வியர்த்தமாகி விடுவதைத்தான் காண்கிரும்.

[2]

நீ உன் வாளாயுதத்தைக் கூராக்கியபோது கூட, உன் ஆன்மாவை நீ கட்டுப்படுத்தி விலங்கிட்டுக்கொள்ளவில்லே. இதயத்தைக் கல்லாக்கிக் கொள்ளவில்லே. அவ்வளவு படுமோசமாக, தாழ்

வாக நான் உன்னை மதிக்கவில்லை. ஏனென்றால், என்னைப்போன்றதொரு தனிமனிதன், அமைதியான உள்ளம் படைத்த ஒருவன் சந்தோஷமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருக்க உதவுகிற—இந்த வாழ்க்கைப் போராட்டத்திலும் ஒருவித மேன்மைக் குணம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், உண்மையிலேயே, உன் ஆன்மாவைக் காசுகளாக மாற்றிக்கொள்ள, அதாவது உன் உள்ளத்தை செல்வத்தைப் பெருக்குவதிலேயே மட்டும் ஈடுபடுத்திக்கொண்ட, அப்பொழுதே உபயோகமற்ற, வெறும் வீணான ஒன்றுக்காக நீயே உன்னையே விற்றுக்கொண்டுவிட்டாய்; உன்னை நீயே செல்வத்திற்கு, பணத்திற்கு அடிமையாக்கிக்கொண்டாய்.

[3]

ஒருவன் அரும்பாடுபட்டு உழைக்கிறான் என்றால், அது எல்லோருடைய நலனையும் கருதியே அவன் அவ்வாறு உழைக்கிறான். ஒருவன் ஒரு பொருளை அள்ளித் தருகிறான் என்றால், ஒரு கொடை அளிக்கிறான் என்றால், அது எல்லோருக்கும் உரிமையான செல்வமேயாகும். வானத்திலிருந்து பொழியும் அமுதமான மழையைப் போலவும், சூரியனிலிருந்து புறப்பட்டு இருண்ட உலகையே ஒளிமயமாக்கும் வெயிலைப் போலவும்,

ஒரு தனி மனிதனின் மேதை, ஒருவனின் அறிவுச் செல்வம் உலகத்திலுள்ள அனைவருக்கும் உரிய அரும் செல்வமாகும்.

[4]

அப்படி இருக்கும்போது, ஒருவன், ஒரு தனி மனிதன் சுயநலம் பிடித்துத் திரிவதில், என்ன உபயோகம் இருக்கிறது?. ஒவ்வொரு பருவகாலத்திலும், காலந்தவருது, இயற்கை அன்னை அள்ளிக்கொடுக்கும் இயற்கைச் செல்வங்கள் யாவும், உலகத்திலுள்ள அனைவருக்காகவும் கொடுக்கப்பட்ட கொடை என்பதில் என்ன சந்தேகம்? நூற்றுக்கணக்கானவர்கள் 'பசிக்குணவு' தேடி, வீட்டுக் கதவைத்தட்டிக் கெஞ்சுகிருர்கள். நாளுக்குநாள் மெலிந்து எலும்பும் தோலுமாகிக் கொண்டே வருகிருர்கள். இரவில் அவர்களைப் பார்க்க நேர்ந்தால், பயங்கரமான பிசாசுகள்போல் காணப்படுகிருர்கள். இந்த நிலைக்கு அவர்கள் வருவதற்குக் காரணம் என்ன? அவர்களுக்குரிய, அவர்கள் உண்ணவேண்டிய உணவை மற்றவர்களாகிய நீங்கள் பறித்துக்கொண்டதுதான்.

நாகரிகம் என்ற பெயரால், புதுமை வாழ்வு என்ற பெயரால், இயற்கை அன்னை பூமிதேவி அளித்துள்ள பெரும்கொடைகளாகிய இயற்கைச்

செல்வங்களேயும், செயற்கைச் செல்வங்களேயும், ஒரு மனிதனே, மற்ருெரு மனிதனுக்கும் உரிய ஆண்டவன் தன் பெருங்கருணையினுல் அருளி யுள்ள உரிமையை மறுக்கிருன்.

[5]

உலகில் ஒவ்வொன்றையும் முடிவில் அழிந்து விடும்படியாகப் படைத்திருப்பதே சிருஷ்டித் தத்து வத்தின் பெருஞ் சிறப்புப்போலும்! வயல்களில் விளையும் தானியங்கள் தாஞகட்டும், தோட்டங் களில் பழுத்துக் குலுங்கும் கனிகள் தாஞகட்டும், எங்கள் வீட்டுக் கொல்லேயில் குலேகுலேயாகத் தொங்கும் வாழைத்தார்கள் தாஞகட்டும், கடவுளின் கட்டளேக்கிணங்க. அந்தந்தப் பருவ காலம் வரையேதான் நல்ல நிலேமையில் இருக்கும்; பின்பு அழிந்துவிடும். இதன் காரணமாக, உலகின் உணவுச் செல்வத்தை ஒரு மனிதனும் பேராசை யுடன் தனக்கென்று குவித்து வைத்துக்கொள்ள முடியாது. பணம் என்ற அந்தக் குளிர்ப்பதன அறையில் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, பின்னர் அவைகளேத் தன் மக்களுக்கே பரம்பரைப் பாத்தியமாக்கிக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்பது, தானியங்கள், பழங்கள் ஆகிய உணவுச் செல்வங்களின் விஷயத்தில் இயற்கை அன்னே

ஒரு பொழுதும் விரும்பியதே இல்லை.

XX

[1]

பாவம்! அந்தக் காலத்தில் மனிதன் தன் பொருள்களையெல்லாம் பொன்னுக்கும் செம்புக்கும் விற்றுக் காசாக்கிக்கொள்ளக் கற்றுக்கொள்ள வில்லை!

பாவம்! அந்தக் காலத்தில் மனிதன் ஆன்மாவை அடியோடு அழித்துப் பாழாக்கும் வித்தையாகிய இன்றையப் பொருளாதார சாத்திரம் பயின்றதில்லை!

பாவம்! விலைமதிக்க முடியாத, ஒப்பற்ற உலோகப்பொருளை விரும்பி அன்னை பூமியின் வயிற்றைக் கீறிப் பிளந்து ஆராயவும், பொய்மைப் பெயராலும், பொய்மை மதிப்பாலும் அந்த உலோகங்களை முத்திரை இடவும் அந்தக் காலத்தில் மனிதன் ஒரு பொழுதும் அறிந்ததில்லை!

[2]

சமுதாயத்தின் பெயரால், அதன் பக்தர்கள், தீர்க்கதரிசிகள், குருமார்கள் யாவரும், சுதந்திரமாக விளங்கிய மனிதனை வெறும் அடிமை என்ற இழிநிலைக்கு மாற்றிவிட்டார்கள். கொடிய மிருகங்களாலும் செய்ய முடியாத, காட்டு மிருகங்களும்

செய்யாத முறையில் மனிதனை மனிதன் அடக்கி ஆளக் கற்றுக்கொண்டுவிட்டான். ஏன்? தன்னுடன் வாழும் சகோதரனின் உரிமையையும், உணவையும், தான் பறித்துக்கொள்ளவும், ஒரு வேளை தனக்குப் பிறவாமலுமிருக்கக்கூடிய பிள்ளைகளுக்காகச் சேர்த்து வைக்கவும்தான் இப்படியெல்லாம் மனிதன் நடந்து கொள்கிறான்.

[3]

ஏ! அமைதியற்ற அலைகடலே! மனிதன் உன்னிடமிருந்து முதலாவதாக, உபயோகமற்ற, வீணானவைகளுக்கெல்லாம் சிடுசிடுத்துக் கோபிக்கவும் பொங்கியெழுந்து, தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களிடமெல்லாம் முடிவேயில்லாத, தீராத சண்டையிடவும்தான் கற்றுக்கொண்டானா? ஆனால் உன்னுடையதோ, உண்மையிலேயே மிகுந்த அன்பும் பிரார்த்தனையும் கலந்த மேன்மையான 'யுத்தம்' அல்லவா? பாபம் போக்கும் புனிதமான ஸ்நானம் அல்லவா உன்னுடையது? இந்த உயர்ந்த பாடத்தை ஏன் உன்னிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ளவில்லை? அழகிய கிரகமாகிய இந்தப் பூவுலகில் மனிதனை மட்டும் தன் அன்றாட உணவுக்கும் உடைக்கும் ஆவலுடன் உழைக்கும்படியாகக் கட்டளையிட்டிருக்கிறார். அப்பேர்ப்பட்ட

கோடானுகோடி மக்களையும், அவர்களுடைய நலன்களை மட்டும் கருத்திற்கொண்டு, தங்கள் சுய நலத்தை மறந்து, என்றுதான் நமது தேசபக்தர் களும், அரசியல் வாதிகளும் தொண்டு புரியப் போகிருர்களோ?

[4]

ஏ! நட்சத்திரங்களே! எத்தனை எத்தனை யுகங்களாக நீங்கள் சிறிதும் சலிப்பின்றி, இவ்வளவு அபூர்வமான ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களின் இந்த அதிசய மான மின்னொளிக்கு நீங்கள் அரும்பாடுபட்டு உழைக்கிறீர்களா, என்ன? எனக்குச் சிறிது சொல்லுங்கள்! கடவுளின் எண்ணற்ற படைப்புக் களில் ஒன்ருகிய இந்த மனிதனுக்கு மட்டும் உணவின் பொருட்டுக் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற கொடிய சாபம் ஏன்?

வானோங்கி வளர்ந்துள்ள மாபெரும் மரங் களும் மிக நீண்ட தூரம் வளைந்து வளைந்து படர்ந்துள்ள கொடிகளும் தங்கள் உணவுக்காக அரும்பாடுபட்டு உழைக்கின்றனவா?

காடுகளில் தங்கள் இஷ்டம்போல் திரிந்து வாழும் மிருகங்கள்தான் தங்கள் உணவுக்காக அரும்பாடுபட்டு உழைக்கின்றனவா?

வானில் சிறகடித்துப் பறக்கும் பறவைகளும் பாடிக்கொண்டே தங்கள் உணவை அவை பெற்று இன்புறவில்லையா?

அப்படியிருக்க, ஏன் மனிதன் மட்டும் இம்மண்ணுலகில் அவனுடைய அன்றாட உணவுக்கும் உடைக்கும் அடிமைப்பட்டு உழலவேண்டும்?

நட்சத்திரங்களின் ஒளியில் அழகுடன் விளங்கும் இம்மணல் வெளியில், சுதந்திரமாகவும், தன்னந்தனியேயும், துணையொருவருமின்றி இருந்து, பட்டினியால் உயிர் துறக்கவும் விரும்புவேனே ஒழிய, ஒருபொழுதும் நான் இப்படி அன்றாட உணவுக்கும் உடைக்கும் அடிமைப் பட்டுழல மாட்டேன்.

ஒரு கவளம் சோற்றுக்கு, உழைத்து உழைத்து களைத்து, அடிமைப்பட்டு வாடுவதைவிட, இந்தக் கடலின் இனிய சப்த ஜாலங்களில் மனம் லயித்து இங்கு தனியே இருந்து மகிழ்வேன்.

[5]

ஜனநாயகம்! புதிய நாகரிகம்! ஐயோ, பாவம்! பாபமூட்டைகளை யெல்லாம் மூடி மறைக்கத்தான்! ஆகா! எவ்வளவு அழகான, பொய்மைப்பெயர், மகாகவிகளாலும், பெரியமகான் களாலும் தங்கள் கண்ணீராலும் கரைக்க முடியாதது; தங்கள் சக்தி

வாய்ந்த மந்திரச் சொற்களாலும் மாற்றிவிட முடியாது;

ஒரு மனிதனை மற்ருெரு மனிதன் கட்டுப் படுத்தி அடக்கி ஆள்வதில் என்றைக்குப் பெருமையும், கர்வமும், லாபமும் அடைய விரும்பாமல் இருக்கிருனே, அன்றைக்குத் தான் மனித வாழ்க்கை என்னும் இனிய நீரோடை பூரணமாகவும் பரிசுத்தமாகவும் செல்ல இயலும்.

பட்டுப்போய் இலைகளின்றி இருக்கும் கிளைகளைத்தறித்துவிட்டு வேருக்கு மெதுவாகச் சிறிது தண்ணீர் ஊற்றிக் கொண்டே வந்தால், நாளடைவில் வாழ்க்கையாகிய மரம் தளிர்த்துச் செழித்துப் பூத்துக் குலுங்கும்.

XXI

[1]

வாழ்வு பூத்துக் குலுங்க வேண்டும் என்று நான் ஏன் இவ்வளவு கவலை கொள்ளவேண்டும்? மனிதவாழ்வோ, அவனுடைய நாகரிகமோ எனக்கு எதற்காக இன்பமூட்டவோ, கோபமூட்டவோ வேண்டும்? இம்மணல் வெளியில் தனிமையான இந்த இடத்தை நான் மிகவும் விரும்புகிறேன். இங்கு இருந்து கொண்டு ஒரு பொழுதும் எனக்கு சொந்தமில்லாத விஷயங்களைப்பற்றியெல்லாம்

எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பது எனக்கு இன்பத்தைத் தருகிறது.

[2]

மனிதவாழ்வின் இன்றைய நிலையையோ, அன்றி இனிவரும் நிலையையோ பற்றி நான் ஏன் இவ்வளவு கவலை கொள்ள வேண்டும்? அவனுடைய சந்தையில் நான் ஏதும் சரக்குகள் வாங்கவோ, விற்கவோ செய்கிறேனு, என்ன?

அவன் செய்யும் பாபச் செயல்களாலேயே அவன் அழிந்து போகட்டும்! தலைநிமிர்ந்து, தீரத்துடனும், அன்புடனும், அழகுடனும், உயர்ந்து வளர்ந்து, பூவுலகையே வலம்வரும் அளவுக்குப் புகழ்பெற்று விளங்கும் உயர் நிலையிலிருந்து தன் பழைய குரங்கு நிலைக்குத் தாழ்ந்து வீழ்ச்சியடையட்டும்!

அல்லது, மேலும் மேலும் உயர்நிலைக்கு ஓங்கி வளர்ந்து, மனிதன் என்ற சொல்லையே அவமானச் சின்னமாகச் செய்யட்டும்.

XXII

[1]

ஏழை, எளியவர்கள் பிரச்சினைதான், ஏழை எளியவர்களின் பசிப்பிணி தீர்க்கும் பிரச்சினைதான் உலகின் மூலாதாரமான பிரச்சினை. தாழ்த்தப்பட்ட

வனாக இருப்பினும், மனிதன் என்ற அவனுடைய பிறப்புரிமை காரணமாக, இவ்வுலகில் அவன் தங்கி வாழ ஒரு இடமும், தோட்டம் சூழ்ந்த ஒரு வீடும், அவனுக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலமும் கேட்டுப்பெறுவதற்கு அவனுக்கு உரிமை உண்டு. செல்வம் மிகுந்த சீமான்களிடமிருந்தும், எண்ணெய் மூலம் மன்னர்களான கோடீஸ்வரர் களிடமிருந்தும், முடிசூடிய அரசர்களிடமிருந்தும், பாராளுமன்றத்தை அலங்கரிப்பவர்களிடமிருந்தும், மகாராஜாக்களிடமிருந்தும் மாபெரும் வணிகர் களிடமிருந்தும், 'ஜனநாயகம், புதிய நாகரிகம்' என்றெல்லாம் முழங்கும் அரசியல்வாதிகளிட மிருந்தும், மிகப் பழங்காலத்திலிருந்து இயற்கை அழகுடன் விளங்கும் வாழ்க்கைக் கோபுரத்தில் வளர்ந்துள்ள களைச் செடிகள் போன்றவர்களிட மிருந்தும் பெறுவதற்கு அவனுக்கு உரிமைஉண்டு.

[2]

இயற்கையாகவே, என் சுபாவத்திலேயே, அரசியலிலேயோ, அரசாங்க நிர்வாக விஷயங் களிலேயோ,எனக்கு அவ்வளவு அக்கறை கிடை யாது. ஆனால், வீசுகின்ற காற்றில் புழுதி, தூசி ஏதும் படிந்து கண்ணில் வீழ்ந்து விட்டால், அப்பொழுது கண்கள் வலியால் துன்புறுகின்றன.

மக்களின் இன்றையப் பிரார்த்தனை, சுதந்திரம்பெற வேண்டித்தான். அரசியல், செல்வ மிகுந்தவரை இன்னும் செல்வச் சிறப்புடையவராக ஆக்கு கிறது. ஏழைஎளியவரை மேலும் பரம ஏழையாகச் செய்கிறது. இது அரசியலின் இயற்கையாக இருக் கிறது. இந்த அரசியல், வாழ்வுச் செடிக்குத் தண்ணீர் வார்ப்பதுபோல நடித்து, அதன் வேரையே தோண்டி எடுத்து, அழித்து விடுகிறது. மந்திராலோசனை சபைகளும், சட்டப் புத்தகங் களும் சிலருடைய மாய விலங்குகள். அவர்கள் இவற்ருல் பலரையும் கட்டிப்போட்டு தங்களையும் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்கிருர்கள்.

XXIII

[1]

என் சந்ததியினருக்கு, அவர்களுடைய அரசி யலுக்கும், அன்ருடத் துயரத்திற்கும், நான் இம் மணல் திட்டுக்களில் கட்டும் மனக்கோட்டைகள், என் பகற் கனவுகள் யாவும் ஏதும் உபயோகமாக இருக்காது.

மனிதன் தோன்றிய நாளிலிருந்து இன்று வரை வளர்ந்துள்ள, அவனுடைய நீண்டபோராட் டங்களுக்கும், கடுமையான உழைப்புக்கும் தகுந்த தாக, நல்லதொரு வருங்காலம்—அவனுக்கு எதிர் கால நல்வாழ்வு ஏதும் கிடையாதா?

மனிதன் தன் அன்றட வாழ்க்கைச் சிக்கல்களில் அகப்பட்டுத் திணறித்திண்டாடி மயங்கிவிழ வேண்டியதுதானு?

மேலும் பூரண நிறைவு பெறத்தான், மனிதன் இவ்வாறு பல சிக்கல்களில் சிக்கித் தவிக்கிருனே?

மேற்கத்திய நாடுகள்தான், கீழ்திசை நாட்டு மக்களுக்காக ஏதும் அதிசயச் செய்திகள் பெற்றிருக்கவில்லையா?

அல்லது, கீழ்திசை நாட்டு மக்கள்தான் மேற்கத்திய நாட்டினருக்காக ஏதும் புதுமைகள், அற்புதங்கள் பெற்றிருக்கவில்லையா?

ஆம்! உண்மையிலேயே இருக்கத்தான் செய்கிறது. மேற்கத்திய நாடுகள் கீழ்த்திசை நாட்டினருக்கு உழைப்பின் தத்துவத்தை மேன்மையை—உபதேசிக்கலாம். கீழ்த்திசை நாட்டு மக்களோ, மேற்கத்திய நாட்டினருக்கு ஓய்வின் மேன்மையை, தத்துவத்தை, அமைதியின் இனிமையை எடுத்துரைக்கலாம்.

[2]

பெரும் பெரும் இயந்திரங்களின் பேரிரைச்சலினுலும், ஓராயிர வருடங்களின் ஓய்வு ஒழிவற்ற, ஊண் உறக்கம் மறந்த, இடைவிடாத கடும் உழைப்பினுலும் மேற்கத்திய நாடுகள் பெரிதும் சாந்தி

இழந்து துன்புற்று வாடுகின்றன. மிகுந்த தீரத்துடன் அவை போராடி மனித சுதந்திரத்தைப் பெற்று விட்டன. ஆனல் அந்த சுதந்திரம் பெற்ற மனிதன், அதற்குப் பதிலாக, இயந்திரங்களுக்கு அடிமையாகி விட்டான்.

இயந்திரத் தொழில்மயமாகுதல்தான் நவீன வாழ்க்கையின் நஞ்சு—புதிய வாழ்க்கையின் பெருங் கேடு. இயந்திரங்கள் வாழ்க்கைக்குக்கேடு என்பதல்ல! பண்டைக்காலந்தொட்டு மனிதனின் பரம்பரைச் செல்வங்களாக விளங்குகிற சுதந்திரம், அமைதி, அன்பு இவைகளை யெல்லாம் அடக்கி, இயந்திரங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பெரும் ஆதிக்கம் செலுத்தி, மனிதனை அடிமையாக்கி விட்டதைத்தான் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது.

எண்ணற்ற ஏழை, எளியவர்கள் நிறைந்த விகாரமான நகர வாழ்க்கையும், நகரங்களில் ஆங்காங்கு காணப்படும் வசதிகள் மிகக் குறைந்த இருண்ட சந்துகளும், சேரிகளும், ஆகியவைதான் இயந்திரமயமான நாகரிகம் தந்த வெகுமதியாகும்.

[3]

சேரிகள், இருண்ட சந்துகள் நிறைந்த நகர்ப்புறங்களை யெல்லாம், பூஞ்சோலைகள்

சூழ்ந்து பொலிவுறும் அழகிய கிராமத்தின் இனிமை தவழும் செளந்தரிய நகரமாகச் செய்யுங்கள். மின்னொளி, மின்சக்தி, மின்சாரம் இவை மனிதனுக்கு இயற்கை அன்னை அருளிய மாபெரும் அன்புப்பரிசுஆகும். கிராமந்தோறும் ஒவ்வொரு குடிசைக்கும், அங்கு வாழும் ஆடவர், பெண்டிரின் மிகக் கஷ்டமான தொல்லை விளைவிக்கும் உழைப்பிலிருந்து விடுதலை அளிப்ப தற்காக இந்த அற்புதமான மின்சக்தியைக் கொண்டு செல்லுங்கள். கடுமையான உழைப் பிலிருந்து அமைதியான ஓய்வின் இனிமையை அனுபவியுங்கள். அமைதி நிறைந்த சாந்தி மயமான ஓய்வினின்று கடுமையான உழைப்பின் மேன்மையை அனுபவியுங்கள். நீண்ட இருண்ட இரவுக்குப் பின், ஒளிவீசும் காலைப்பொழுது புலருவதுபோல உங்களுக்கும் மிக உயர்ந்த மேன்மையான நல்வாழ்வு காத்திருக்கிறது. ஆற்றிற்கும், கடலுக்கும் இடையே, இந்தத் தங்கத் தீவில், கீழ்த்திசை நாட்டினரும், மேற் கத்திய நாட்டினரும் ஒன்ருகச் சேர்ந்து மனித குலத்தின் நன்மைக்காகப் பிரார்த்தனை புரியும்படி யாக, ஒரு புதிய விசாலமான வாழ்க்கைக் கோயிலைக் கட்டுங்கள்.

XXIV

[1]

இறைவன் படைப்புக்களில் நாம் காணும் கண்ணையும் கருத்தையும் கவரும் பரந்து விரிந்துள்ள மைதானம், நீலவானம், பசுமை தவழும் புல்வெளி, புன்னகை புரியும் தானிய வயல்கள், மௌனமாய் இருந்துகொண்டே மின்னொளி வீசும் நட்சத்திரங்கள், வெள்ளி நிலவு பொழியும் சந்திரன், ஓங்கி உயர்ந்து வளர்ந்துள்ள மலைச் சாரல், மிகுந்த உயரத்திலிருந்து பாதாளத்தை நோக்கிப்பாயும் அழகிய நீர்வீழ்ச்சிகள் ஆகிய இயற்கை அன்னை அளித்துள்ள எண்ணற்ற வெகுமதிகளால், உங்கள் ஆன்மாவை நல்ல ஆரோக்கியமான முறையில் வளர்த்துப் போற்றிக் காப்பாற்றுங்கள்.

[2]

இனிப் பிறக்கப்போகும் பிள்ளைகளுக்கென்றும் இனிப் பிறக்கப்போகும் பேரன்களுக்கென்றும், ஒருவேளை பிறவாமலுமிருக்கக்கூடிய அவர்களுக்காக, வீணில் பிரயாசைப்பட்டு உழைத்து, வியர்வை சிந்தி உழைத்துக் களைத்து நீங்கள் சக்தி இழந்து போகாதீர்கள். உங்களுக்குரிய ஒரு ஏக்கர் நிலத்தை நீங்கள் உழுது சாகுபடி செய்யுங்கள்;

உழைப்பிலேயே ஒருவிதக் களிப்பையும், களிப்பிலேயே மூழ்கிவிடாமல் அப்போதும் இயன்ற அளவு உழைத்தும் மகிழ்ச்சிகொள்ளுங்கள். உங்கள் வீட்டுப் பசுவை நீங்கள் பாராட்டி வளர்த்துப் பயன் அடையுங்கள். உங்களுக்குத் தேவையான உடையைத் தயாரித்துக்கொள்ள நீங்களே நூற்று நெய்துகொள்ளுங்கள். உங்கள் தேவைக்கு மிதமிஞ்சி, வீணுக்கு உழைத்து உடல் ஓய்ந்து போகாதீர்கள். பரிபூரணமான சிக்கனம், எளிமை கலந்த இனிய வாழ்க்கையை, அமைதியாக தவத்திலும் தியானத்திலும், பரந்து, விரிந்து, விசால்மாக வளர்ந்துள்ள ஆலமரத்தின் நிழலில் சாந்தமயமாக இருந்து மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.

[3]

சுண்ணும்பிலும் செங்கல்லிலும் செல்வத்தைச் செலவிட்டு வீட்டைப் பெரிதாகக் கட்டிப்போடாதீர்கள். பொன்னையும் வெள்ளியையும் விரும்பி, அன்னை பூமியின் வயிற்றைக் கீறிப்பிளப்பது போல பூமியைக் குடைந்து தேடியலையாதீர்கள். எஞ்சியிருக்கும் உணவுப் பொருளை, தேவைக்கும் அதிகமாக உள்ள உணவுப் பொருளைச் சேகரித்து நீங்களே குவித்து வைத்துக் கொள்ளாதீர்கள். இனிப்

பிறக்கப் போகும் பிள்ளைகளுக்கென்றும், பேரன் களுக்கென்றும் ஒரு வேளை பிறவாமலிருக்கக்கூடிய அவர்களுக்கென்று, உங்கள் பரிசுத்தமான ஆன் மாவைக் காசைக் குவிப்பதிலேயே கருத்தைச் செலுத்தி, செம்பாகவும் பொன்ஞகவும் ஆக்கிக் கொள்ளாதீர்கள்.

XXV

[1]

சுய நலம் காரணமாகத் தோன்றும் ஆசைகள் ஆகிய பகட்டான பட்டுக் கயிற்றினுல் கட்டப் பட்டுள்ள நிலையிலிருந்து, இந்தப் பந்தங்களில் இருந்து மீண்டு வெளியேறி, ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தேவையான நூலைத் தானே நூற்றுக் கொள்ளும் சுதந்திரச் சூழ் நிலையில், பூரணமான எளிய, சிக்கன, தவயோக வாழ்வு பெற்று, புகழும் பெருமையும் உடைய கடவுளுக்கு உகந்ததான புனிதமான ஆடையை, சாந்தி நிறைந்த ஆனந்த மயமான தியான நிலையில் நெய்து இன்பம் அடையட்டும். இதற்கு இந்தப் புதிய மதம், புதிய கொள்கை மனிதனுக்கு உபதேசித்து, நல்வாழ்வு பெறக் கற்பிக்கட்டும்.

மனிதனின் ஆன்மா மிகவும் உயர்ந்த நிலை யில் முழு வலிமை பெற்று,ஐம்புலன்களையும் நன்கு

வசப்படுத்தி, தன் உள்ளத்தில் எழும் மிக மேன்மை யான புனித உணர்ச்சிகளுக்கு இதய பூர்வமான ஒத்துழைப்புத்தந்து, தன் மனத்தை அவைகட்கு அடிமையாக்கட்டும்.

[2]

சுயநலப் பற்றின்றியும் பெருந்தன்மையுடனும் கண்ணியமான முறையில் எந்தக் காரியத்தையும் சிறப்பாகச் செய்யுங்கள். முன்யோசனையின்றிக் கண்மூடித்தனமாக, தன்னலம் கருதியும் எந்தக்கா ரியத்தையும் செய்யாதீர்கள். மனத்தில் பூரணமான அன்பும் அருளும் கொண்டு, தீரமாக எச்செயலை யும் விருப்பமுடன் செய்யுங்கள். காலத்திற்குப் பொருந்துமாறும், தனக்குத் தன் நிலைக்குத் தகுந்த வாறும், அறநெறி அங்கீகரித்துள்ள தருமமான வழிகளில் நின்று புனிதமாகப் பணியாற்றுங்கள். அகில உலக நலம், உலகம் முழுவதிலுள்ள மக்கள் அனைவரின் நன்மை என்னும் கருப்பையிலிருந்து தோன்றியுள்ளது தான், அறநெறிகளின் கோட் பாடுகளாகிய தர்மம் என்பதாகும். அவை அனைத் தும் உலகத்தோர் அனைவருக்கும், எக்காலத்திலும் நன்மையே தருவனவாகும். தனிமனிதன் மேம் பாடு அடைந்து உயர்வு பெற்றுச் சிறப்பு எய்தவும், மக்கள் அனைவரும் சேர்ந்து செயல் பட்டுச் சீர்

பெறவும், ஆகிய இருதுறைகளிலும் அறநெறிகள் எனப்படும் தருமமார்க்கம் பெரும் உதவிபுரியும். ஏனெனில், அவை, வாழ்வின் அகம், புறம் ஆகிய இருதுறைகளிலும் மிக அழகான முறையில் வழி காட்டும் விதத்தில் வகுக்கப்பட்டுள்ளன. யாவர்க்கும் பொதுவான கருத்துக்களை உடையதாகவும், எந்தச் சந்தர்ப்பத்திற்கும் பொருந்துவதாகவும் அவை அமைக்கப்பட்டுள்ளன.

இரவில் மேன்மையான குளிர்ந்த பனிபெய்வது போல, இப்பூவுலகில் சாந்தி மயமான பூரண அமைதி தோன்றி, மனிதவாழ்வு வளம்பெறச் செய்யட்டும்!

XXVI

Part V [1]

இந்த என் பகற்கனவுப் பாடல்களைப் பாடிப் பாடி நான் களைத்து விட்டேன்.

இந்த அகில உலக நலம் என்னும் உலகப் பொது நன்மையில் நான் என்ன பங்கு பெற்றிருக்கிறேன்? அகில உலகின் நன்மை, தீமைகள், இன்ப, துன்பங்கள் ஆகியவை எவையும் என் பொருட்டாக, எனக்காக எதுவும் இல்லை. அகில உலகம் என்னும் அந்த உலகப் பொதுச் சந்தையில் நான் ஏதும் சரக்குகள் விற்கவோ, வாங்கவோ

செய்கின்றேனு, என்ன? மெலிந்து, நலிந்து, துடிப்புத்தளர்ந்து, பலவீனமாக, எப்பொழுதும் சிந்தனை சூழ்ந்த உள்ளத்துடன், உடைந்த படகு கடலோரத்தில் கிடப்பது போல், இந்த மணற்திட்டுக்களில் நான் இருக்கிறேன்.

[2]

மனிதனின் எதிர்கால நல்வாழ்வு பற்றிச் சிந்தித்து நான் ஏன் கவலை கொள்ளவேண்டும்? வாழ்வின் இனிமை, இன்ப வாழ்வு என்பது எனக்கு ஏதும் இல்லை. ஆற்றிற்குக் கடல் உண்டு. மலருக்குத் தேனீ உண்டு. ஆனுல், என் வாழ்வு என்னுடன் முடிந்து விடும்.

[3]

எனக்கு ஒரு பொழுதும் சம்பந்தமேயில்லாத எண்ணற்ற எத்தனையோ விஷயங்களைப் பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டே இன்று இந்த ஒரு இரவுப்பொழுதையேனும் இந்தமணற்திட்டுக் களிலேயே நான் கழித்து விடுகிறேன். இந்த மணற்திட்டுக்கள் தான் எனக்கு இனிய சுவர்க்கம் போல இருக்கிறது. மிக அபூர்வமான எண்ணங்களையும், மிக உயர்ந்த சிறந்த கருத்துக்களையும், ஒளியுடன் விளங்கும் நட்சத்திரங்களை உடைய இந்த இரவுப் பொழுதில் நான் தனிமையாக

அனுபவிக்கும் இந்த இன்பங்கள், என் உள்ளத்தில் நிரம்பிவிடுகின்றன. அவை ஆனந்தமயமான ஆத்மானுபவம் நிறைந்த தியானம் புரியும் நேரங்கள் ஆகும்.

என் மீது, தனிமையில் உள்ள என் மீது, இரங்கி ஏதோ ஒரு அன்பான, இதமான வார்த்தை சொல்வது போல எனக்குத் தோன்றுகின்றது, இதோ விரைந்து பாய்ந்து சுழல்களுடன், கடலோடு கலந்து மகிழ்வதற்காக வரும் இந்தக் காவேரியைக் காணும் போது. பரிசுத்தமானதும், புனிதமானதும், மிகத் தூய்மையானதுமான காவேரி! நீ மகிழ்வுடன் விரைந்தோடி வா! ஏனெனில், உன் லட்சியமான கடலை நீ இதோ அடைகிருய் அல்லவா?

[4]

கடலுக்கு இவ்வளவு அருகில் வந்து விட்ட நீ, இப்பொழுதும், புனிதமான காவிரியே! உடலுக்கு எவ்வளவு குளிர்ச்சியையும் மென்மையையும் உணரும்படியாகச் செய்கிருய்! காவிரிக் கன்னிகையே! உன் புனித இலட்சியம், நீ ஆவலுடன் தேடி வந்தது, இதோ உன்னை அடைகிறது. இதோ உன் விருப்பம் பூர்த்தியாகிறது. ஏனெனில், நீ இதோ உன் காதலனின் காலடியில் இருந்து

இன்பமடைகின்ருய். இந்த சுப முகூர்த்தமான உன் மங்கள வேளையில், கண்ணுக்குத் தெரியாத மணம் மிக்க மலர்களாகிய ஆசியை, மழையென தேவர்கள், நட்சத்திரமண்டலத்திலிருந்து பொழி வார்களாக! சாந்தி, அமைதி, பூரண திருப்தி ஆகியவை அனைத்தும் இனி உன்னுடையதே ஆகும்!

XXVII

[1]

விண்ணில் தனிமையாக விளங்கும் நட்சத்திரங் களைப் போல, என் வாழ்வை நான் எவருடனும் பங்கு கொள்ளாமல் தனியாகவே இனிமையாகக் கழிப்பேனாக!

கடுங்கோடையில் காய்ந்து கிடக்கும் வறண்ட நிலத்தின் மீது பொழியும் கோடை மழையைப் போல, நானும் தன்னந்தனியே, பயன் ஏதுமின்றி பயன் விளைவிக்காமல் இருந்து விட்டுச் செல் வேனாக!

மந்திரங்களை ஒலித்துக் கொண்டிருக்கும் அலைகளைப் போல என் சமாதானச் செய்தியை, சாந்தி மயமான செய்தியை நான் என்னுள்ளே முணு முணுத்துக் கொண்டிருப்பேனாக!

தேனீக்கள் தேனைக்கொண்டு செல்வதுபோல,

இந்த இளங்காற்று என் மெல்லிசையைக்கொண்டு சென்று, நகரங்களிலும், கிராமங்களிலும் மக்களிடையே ஒலிக்குமாக!

ஆடித்திங்கள் பதினெட்டாம் நாளில், பதினெட்டாம் பெருக்கன்று, காவேரியின் புது வெள்ளத்தின் மீது பொங்கிவரும் நுரைபோல, ஆடிக்கொண்டும் மகிழ்வுடன் மிதந்து கொண்டும், அழகிய ஒரு சிறு கிளை யாகிய நானும் வாழ்க்கை என்னும் ஆற்றுவெள்ளத்தில் மிதந்து செல்வதில் மன நிம்மதி அடைகிறேன்!

[2]

உங்களுடனே, இந்த உலகவாழ்வுடனே, நான் ஏதும் பங்கு, சம்பந்தம் பெற்றிருக்கவில்லை. மனித வர்க்கத்திலிருந்தே பிரிந்து, தனியே வந்து விட்ட ஒரு தன்னந்தனியன். இவ்வுலக வாழ்வாகிய வேலி அடைக்கப்பட்ட கிணற்றுடன் கூடிய ஒரு தோட்டத்திற்கு அப்பால், அங்கு மிங்குமாகத் தன்னந்தனியே முளைத்து கிடக்கும் அந்நிய தேசத்துச் செடிகொடிகளைப் போல, நானும் ஒரு தன்னந்தனியன். ஆனால், கடலின் உப்பந்தண்ணீரினாலும், நட்சத்திரங்களின் புன்னகையினாலும் இந்த மணற்திட்டுக்களின் மீது செழிப்புடன் வளர்ந்து மண்டிக்கிடக்கும் இந்தக் கடற்பூண்டு

களுக்கும் எனக்கும் அதிகமான ஒற்றுமை, நேசம் இருக்கிறது.

ஆறு கடலை அடைகிறது. மலர் தேனீயைப் பெற்றிருக்கிறது. என் வாழ்வு என்னுடன் முடிந்து விடுகிறது.

ஆனல், இம்மணற்திட்டுக்களில் நான் தன்னந் தனிமையில் இருந்து மகிழ்வதில் மிகுந்த இன்ப மடைகிறேன். இஷ்டம்போல் திரிந்து அலையும் காற்று என்னை முத்தமிடுவதும், குளிர்ந்த அலைகள் வந்து என்னைத் தழுவுவதும், என்னிடம் ஆறு ஆராய்ந்தறிய முடியாதவாறு மழலைமொழிவதும், கடல் என் காதில் மதுரகீதம் ஒலிக்குமாறு இசைப் பதுவும் என்னைப் பெரிதும் களிப்படையச் செய் கின்றன.

[3]

உங்களுக்கு ஒரு பொழுதும் சம்பந்தமில்லாத, எண்ணற்ற, பல பொது விஷயங்களைப் பற்றி, தன்னந்தனியே இருந்து,எண்ணி எண்ணி, ஏங்கிக் கொண்டிருத்தலே, ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சியைத் தருகின்றது.

வானத்தில் விளங்கும் அசைவற்ற நட்சத் திரங்களைப் போலவும், கடலிலும் கரையிலும் காணப்படும் அபூர்வமான தனிப்பட்ட அற்பு

தங்கள் போலவும், எவருடனும் பங்குகொள்ளாது தன்னந்தனியே இருந்து மகிழ்வதில் ஒரு தனிப்பட்ட ஆனந்தம் இருக்கிறது. ஏனென்ருல், இப்பேர்ப்பட்ட இனிமைதரும் தனிமையே வாழ்வின் சிறப்பை, தாளலயம் தவருத இயற்கை வாழ்வைத் தந்து களிப்பூட்டுகிறது.

இதோ, என்னுடன் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கும் காற்றுத் தேவனுக்கு குழலில் ஒரு கீதம் இசைப்போமாக!

இதோ, என்னுடன் இசைபாடிக் கொண்டிருக்கும் பறவைகளுக்கு மதுரமான இனியதொரு பாடலைப் பாடுவோமாக!

இதோ, மௌனமாக என்னைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுவதுபோலக்காணப்படும் நட்சத்திரங்களுக்கு, அவைகள் என்னிடமிருந்து ஆவலுடன் விரும்பும் ஒரு அபூர்வமான தாலாட்டுப் பாடலுக்காக, அருமையான தொரு மோகன கீதத்தை இனிமையாகப் பாடுவோமாக!

ஏனென்ருல், தனிமையே, இந்த இனிமை தரும் ஏகாந்தமே, ஆனந்தமான வாழ்வு ஆகும்!